பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 08, வெள்ளிக்கிழமை 23.12.2016 | கதிர் 48

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# ஒற்றையாட்சி நீடிப்பது பிளவையே ஏற்படுத்தும்!

## இப்படிக் கூறுகிறார் மாவை



யாழ்ப்பாணம், டிசெம்பர் 23

**"ஒற்றையாட்சி தொடர முடியாது. ஒற்றையாட்சி தொடர்ந்தால் அது பிளவையே ஏற்படுத்தும்"**

**- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா.**

புத்தூர், ஆவரங்கால் கிழக்கில் லிங்கன் மத்திய சனசமூக நிலையம் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் பொன் விழா நிகழ்விலும், ஸ்தாபகர் கௌரவிப்பு நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் காலையில் இடம்பெற்றது.

அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உங்கள் பலத்தோடு ஒரு புரிந்துணர்வோடு செயற்பட்டார்கள். சர்வதேசத்தின் முன் நாம் ஒன்றுபட்டு நின்றோம். அதுதான் எமக்குக் கிடைத்த மிகப் பலமான காலம். கடந்த ஏழு ஆண்டுகளாக அந்தச் சந்தர்ப்பத்தில் இல்லாமல் இருக்கின்றோம்.

இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு வெற்றிபெற நாம் தவறிவிட்டோம் என்று நாடுகளும்,

பக்கம் 02 »

## மிக கண்ணியமாக நடந்த நேற்றைய சபை அமர்வு!

### ஊடகச் செய்திகளால் கைமேல்பலன்

யாழ்ப்பாணம், டிசெ.23

வடக்கு மாகாணசபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து நேற்றைய ஊடகங்களில் வெளியான செய்திகளால் கைமேல் பலன் ஏற்பட்டிருக்கின்றது.

நேற்றைய சபை அமர்வு கனகச்சிதமாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமர்வின் போது சபையில் ஏற்பட்ட குழப்பங்கள், அசம்பாவிதங்கள், தவறான வார்த்தைப் பிரயோகங்கள், களேபரங்கள் ஆகியவை குறித்து நேற்றைய பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் முகநூல் உள்ளிட்ட சமூகவலைத்

பக்கம் 19 »

## நேற்றைய அமர்வில் ஆச்சரியம்

யாழ்ப்பாணம், டிசெ.23

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு பல ஆச்சரியங்களைத் தந்தது.

வழமைக்கு மாறான கண்ணியமும் பேணப்பட்டது.

இதுவரை காலமும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக ஆளும் தமிழ்க் கூட்டமைப்புத் தரப்பில் இருந்த ஒரு குழு பகிரங்கமாக விமர்சித்து செயற்பட்டு வந்தது.

அதனால் நேற்றைய அமர்வில் அமைச்சர் ஐங்கரநேசனின் விவசாய அமைச்சர் மீதான விவாதம் நடக்கும்போது பலத்த எதிர்ப்புக் குரல் ஒலிக்கும் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், வழமையாக ஐங்கரநேசனுக்கு எதிர்த் தரப்புப் போல குரல் எழுப்பும் லிங்கநாதன்

பக்கம் 19 »

## ஐங்கரநேசனைப் பாராட்டி 'பல்டி' அடித்தார் லிங்கநாதன்

யாழ்ப்பாணம், டிசெ.23

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை பெரும் ஊழல்வாதி போலக் காட்டி, அவர் மீது அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அவற்றை விசாரிக்கும் படி ஒற்றைக் காலில் நின்று வலியுறுத்தி, சரமாரியாக அறிக்கைகளையும் உரைகளையும் வெளியிட்டு வந்த லிங்கநாதன் நேற்று அமைச்சர் ஐங்கரநேசனின் அமைச்சு மீதான விவாதத்தின் போது அந்தர் பல்டி அடித்து, அமைச்சரைப் பாராட்டுவது போல பேசி பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார்.

பக்கம் 19 »

## இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானம் எழுத்து மூல அறிக்கை மார்ச் 22 இல்!

கொழும்பு, டிசெ.23

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு எவ்வாறு நடைமுறைப்படுத்தி வருகின்றது என்பது தொடர்பிலான எழுத்து மூலமான அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசைன் மார்ச் 22 ஆம் திகதி வெளியிடவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடர் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இதன்

பக்கம் 19 »

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் 8ஆம் திகதி விசேட கூட்டம்

கொழும்பு, டிசெ.23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் ஜனவரி மாதம் 08ஆம் திகதி கொழும்பில் இருக்க வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

புதிய அரசமைப்பு மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு மார்க்கஸ் பெர்ணான்டோமாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 9,10ஆம் திகதிகளில்

பக்கம் 19 »

## சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைதல்; உட்சூக்குமம் நேற்றுச் சபையில் அம்பலம்!

### போட்டுடைத்தார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா

யாழ்ப்பாணம், டிசெ.23

'நொதேர்ண் பவர்' மின் உற்பத்தி நிலைய கழிவு ஒயிலினால் சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீர் மாசடைந்ததான குற்றச்சாட்டு விவகாரத்தில் நிலைமை தலைகீழானதன் பின்புலத்தை நேற்று வடக்கு மாகாண சபையில் அம்பலப்படுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

விவசாய அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மீது உரையாற்றுகையிலேயே இந்த விடயங்களைப் போட்டுடைத்தார் அவர்.

நிலத்தடி நீர் மாசடைந்ததாக முதலில் பெரிய குற்றச்சாட்டும் கூப்பாடும் எழுந்தன. பின்னர் அது அமுங்கிப்போனதன் பின்புலத்தையே அவர் அங்கு விவரித்தார்.

மேற்படி 'நொதேர்ண் பவர்' நிறுவனத்தின் பிரதான கம்பனி ஒரு சர்வதேச நிறுவனம். அதன் இயக்குநர்களில் ஒருவர் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

கொழும்பில் மிகப் பெரிய

பக்கம் 19 »

அளப்பு அருணாசலம்



உந்த அடக்கம் இன்னும் எத்தனை அமர்வுக்கோ...?

## வினாத்தாள் திருத்துவதற்காக 68 பாடசாலைகள் மூடப்படும்

கொழும்பு, டிசெ.23

பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக நாட்டில் உள்ள 68 பாடசாலைகள் மூடிவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த 17 ஆம் திகதி நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து இந்தப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படஉள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களின் முதற்கட்டத் திருத்தும் பணிகள் ஜனவரி 2ஆம் திகதி முதல் ஜனவரி 16ஆம் திகதி வரை இடம்பெறும் எனப் பரீட்சைகள்

பக்கம் 19 »

## நியூஸிலாந்தில் பாரிய தீ அனர்த்தம்; இலங்கையர் மூவர் பலியாகினர்!

நியூஸிலாந்தின் தென் ஒக்லண்ட் பிரதேசத்தில் இடம்பெற்ற பாரிய தீ விபத்துச் சம்பவம் ஒன்றில் இலங்கையைச் சேர்ந்த மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

நியூஸிலாந்தில் அகதிகளுக்குச் சார்பாகச் சட்ட நடிவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சட்டத்தரணி கைலேஷ் தனபால சிங்கத்தின் மனைவி, அவரின் ஐந்து வயதுடைய மகன் மற்றும் மாமி ஆகியோரே இந்தத் தீ விபத்தில் பலியாகியுள்ளனர்.

சட்டத்தரணி கைலேஷ் தனபாலசிங்கம் காயமடைந்த நிலையில் மிடில்மோர் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார் என நியூஸி

பக்கம் 19 »

# வவுனியாவில் தமிழ் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டார்

வவுனியாவில் தமிழ் இளைஞர் ஒருவர் பெரும்பான்மை இனத்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த த. சுபராஜ் என்ற 26 வயதுடைய இளைஞரே பெரும்பான்மை இனத்தவர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் வவுனியா நகரப் பேருந்து நிலையத்தில் உணவகம் ஒன்றை நடத்தி வருகின்றார். கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா–கொழும்பு வழித்தடத்தில் பயணிக்கும் தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் உட்பட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர், இந்த இளைஞரின் கடைக்குச் சென்று தேநீர் கேட்டுள்ளனர்.

எனினும் இந்த இளைஞரால் வழங்கப்பட்ட தேநீர் சூடாக இல்லாத காரணத்தால், தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோர் இளைஞருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் அந்த இளைஞன் உணவகத்தில் தனியாக நிற்பதை அவதானித்த தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோர் முதல்நாள் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தை மறந்து சமாதானமாகுவதற்கு வருமாறு உணவக உரிமையாளரான இளைஞரை அழைத்துள்ளனர்.

அப்போது சமரசம் செய்வதற்குத்தான் அழைக்கின்றனர் என நினைத்துச் சென்ற இளைஞர் மீது, அங்கிருந்த சிலர் இரும்புக் கம்பியால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தால் மயக்கமடைந்த இளைஞரைத் தமது பேருந்தில் ஏற்றி அவர்கள் மதவாச்சிக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தை நேரில் கண்ட கச்சான் வியாபாரி ஒருவர், தாக்குதலுக்குள்ளான இளைஞரின் உணவகத்துக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து மதவாச்சி நோக்கி மின் விளக்குகள் அற்ற நிலையில் தனியார் பேருந்து ஒன்று செல்வதை அவதானித்த கடையில் இருந்தவர்கள் மோட்டார் சைக்கிளில் பேருந்தைப் பின்தொடர்ந்தனர்.

இதனால் உசாரடைந்த தனியார் பேருந்துச் சாரதியும் நடத்துனரும் இளைஞரை வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

காயமடைந்த இளைஞர் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளம்பர போஸ்ரர்கள் ஒட்டிய மாணவர்கள் மீது வாள்வெட்டு

## இருவரும் வைத்தியசாலையில் அனுமதி

தனியார் கல்வி நிலையத்தின் விளம்பர போஸ்ரர்களை ஒட்டிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இரு மாணவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில், அந்த இரு மாணவர்களும் காயமடைந்துள் ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு ஊரெழு பிள்ளையார் கோயிலுக்குஅண்மையில்இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கனிஸ்ரன் மற்றும்யதுசன் ஆகியமாணவர்களே காயமடைந்தனர். இதில் கனிஸ்ரன் என்ற மாணவன் பலத்த காயமடைந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மேற்படி இரு மாணவர்களும் போஸ்ரர்களை ஒட்டிவிட்டுதுவிச்சக்கரவண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் இவர்களை வாளால் வெட்டிவிட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த மாணவர்களை வீதியால் சென்றவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-09)

# மக்கள் கருத்தறியும் கலந்துரையாடல்

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மக்கள் கருத்தறியும் விசேட கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கதீஜா மகளிர் கல்லூரியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தலைமையில் நடைபெறும். இந்தக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர்விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பங்குபற்றவுள்ளனர்.

ஜே/86, ஜே/87, ஜே/88, கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அனைவரையும் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அறிவித்துள்ளார். (இ-19)

# விடைபெறும் ஐ.நா செயலாளர் மூன் ஜனாதிபதி சிறிசேனவை பாராட்டினார்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விடைபெறும் பான் கீ மூன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று வியாழக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இலங்கை, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பாராட்டினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக தான் கடமையாற்றிய காலத்தில் இலங்கையை புதிய பாதையில் பயணிக்கச் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட அர்ப்பணிப்பை பாராட்டிய மூன், ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெறும் என குறிப்பிட்டார் என்றும் ஊடகப் பிரிவின் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

தான் பதவியிலிருந்து விலகிச் சென்றாலும் இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குவார் என பான் கீ மூன் இதன்போது உறுதியளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பான் கீ மூன் இலங் கைக்கு வழங்கிய ஒத்துழைப்பை பாராட்டிய ஜனாதிபதி அவருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# வட்டுக்கோட்டை இலங்கை வங்கியில் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம்

## நேற்று திறந்துவைக்கப்பட்டது

இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டை கிளையில் நேற்று வியாழக்கிழமை தன்னியக்கப் பணப் பரிமாற்று இயந்திரம் (ஏ.ரி.எம்) திறந்துவைக்கப் பட்டது.

இந்தக் கிளையில் மேற்படி இயந்திரம் இன்மையால் தாங்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கிறார்கள் என வாடிக்கையாளர்கள் தெரிவித்து வந்ததைத் தொடர்ந்தே நேற்று அது திறந்து வைக்கப்பட்டது.

கிளை முகாமையாளர் கே.புவனேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர்ஜேம்ஸ்பிரபாகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஏ.ரி.எம் இயந்திரத்தை திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் சகாதேவன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர். வட்டுக்கோட்டை உப தபாலதிபர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வாடிக்கையாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம-58)

# ஒற்றையாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திரிகளும் எங்களை விமர்சனம் செய்தார்கள்.

அதன் பின்னர் ஐ.நா., ஐ.நா. மனித உரிமைகள் சபை போன்ற வற்றின் பங்களிப்பு வந்தது. இந்த நாட்டில் அக்கறை கொண்டு தீர்மானம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. அதில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது முக்கியமானது.

தீர்வுக்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அதை யொட்டி பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். பத்திரிகைகள் தங்களுக்கு ஏற்றவாறு தெரிந்தும் தெரியாமல் எழுதிக்கொண்டிருக்கின்றன.

நாங்கள் மிக நிதானமாகப் போய்க் கொண்டிருக்கின்றோம்.

இன்று மிக முக்கிய கால கட்டம். சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இதுவரை காலமும் ஒன்றுபட்டிருக்கவில்லை. இன்று சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி. ஐ.தே. கட்சியின் தலைவர் பிரதமர்.

உங்கள் வாக்களிப்பின் வெற்றிதான் அதையும் இன்று தீர்மானித்திருக்கின்றது. நீங்கள் தந்த ஆணையை நாம் வெறுமனே தூக்கி வீசமுடியாது. எங்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது.

தென்னிலங்கை அரசியலில் இனவாதிகள், மிகவும் மோசமான முறையில் மோசடி புரிந்த ஊழல்வாதிகள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டிருக்கின்றார்கள். தங்களின் ஊழல்கள், மோசடிகள் அம்பலப்படுத்தாமல் மறைக்கப்படுவதற்காக இந்த ஆட்சியைக் கவிழ்க்க எத்தனிக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் துணைபோகக்கூடாது. நாங்கள் அப்படிப் போகவும் மாட்டோம்.

ஓர் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்றால் நிலைமையைச் சிந்தித்துப் பாருங்கள்.

அதற்காக மற்றத் தரப்பை நாம் முழுமையாக நம்பியிருக்கின் றோம் என்று அர்த்தமல்ல. 'நம்ப நட, நம்பி நடவாதே!' – என்றார் தந்தை செல்வா. அதுவே எமது பாதை.

அண்மையில் கூட நாடாளுமன்றத்தில் பல விடயங்களைப் பற்றி நாம் வலியுறுத்தினோம்.

நேற்று அரசியலக்கு வந்தவர்கள், 'ஆனா', 'ஆவன்னா' படிக்கின்றவர்கள் இன்று மிகப் பெரும் புலவர்கள் போல பேசுகின்றார்கள் – ஒரு துளி வியர்வையைக் கூடச் சிந்தாத வர்கள், ஒரு துளி இரத்தத்தைக் கூடக் காணாதவர்கள் அப்படிப் பேசுகின்றார்கள்.

அரசுக்கும் எமக்கும் உள்ள உடன்பாடுகளை நாங்களாகவே முறித்துக் கொள்ளக் கூடாது. அதுதான் இன்றுள்ள இராஜதந்திரம்.

நாங்களாகவே அதை முறித்துக் கொள்வதாக இருந்தால், மீண்டும் நாங்கள் சர்வதேசத்தை இழந்தவர்களாக இருப்போம்.

தென்னிலங்கையில் இருக்கும் இனவாதிகள் வெற்றி பெறுவார்களாக இருந்தால் – உடன்பாடு, நல்லிணக்கம் இல்லாமல் போகுமானால் – அத்தகைய ஆபத்து எமக்கு நேரும்போது அதற்கு சர்வதேசத்தைப் பொறுப்பாக்கும் இராஜதந்திரத்தை நாம் கைவிட முடியாது.

தந்தை செல்வாவின் தலைமையின் கீழ்நாம் விடயங்களை அணுகியபோது சிங்களத் தலைவர்கள்தான் ஒப்பந்தங்களைக் கிழித்தார்கள்; தமிழர்களின் உரிமைகளை மறுத்தார்கள். தமிழர்கள் அதில் தவறிழைத்தார்கள் என்று ஒரு சொல் குற்றம் கூட ஏற்பட அவர் இடமளிக்கவில்லை.

அதே கோட்பாடு இப்போதும் மிகத்தேவையாக இருக்கின்றது. ஐ.நா. தனது தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் இராஜதந்திரிகள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கிழமையும், ஒவ்வொரு மாதமும் இங்கு வந்து கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் மிகக் கவனமாக வேலை செய்ய வேண்டும்.

ஒற்றையாட்சி தொடரமுடியாது, ஒற்றையாட்சி தொடர்ந்தால் அது பிளவை ஏற்படுத்தும், ஒரு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்பட்டு, நாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசத்திலே – தமிழ், முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசத்தில் – அந்த ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று நாம் கூறியிருக்கின்றோம்.

இது பகிரங்கமான விடயம். பத்திரிகைகள் ஒவ்வொன்றும் தங்கள் அரசியலுக்கு ஏற்றவாறு பேசுவதைப் பற்றியதல்ல இப் பிரச்சினை.

இதை நாங்கள் ஜனாதிபதியிடம் பேசியிருந்தமையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மிக அண்மையில் ஜனாதிபதி எமது ஊருக்கு வந்து வீடுகளைக் கையளித்த போது நான் பேசியவற்றை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

நாங்கள் பயங்கரவாதிகள் அல்லர். அப்படிச் சொல்வதை நீங்கள் தொடரமுடியாது. நான் பலதடவைகள் சிறைக்குச்சென்றிருக்கிறேன். என் உயிர் பல தடவைகள் பறிக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் விடுதலைக்காகத்தான் அந்த அர்ப்பணத்தைச் செய்திருக்கின்றோம் என்று நாங்கள் நம்புகின்றோம். அதைச் செய்வதற்காக இன்று உயிரோடு இருக்கின்றோம். – என்றேன்.

அதனால், இப்போது மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தனது முகப்புத்தகத்தில் 'பயங்கரவாதம்' என்று பொய்யாக வந்துகொண்டிருந்த சொல்லை அவர் எடுத்துவிட்டார் என நாம் அறிந்தோம்.

"மாவை சேனாதிராசா பேசுகின்றமையை நான் மிக உன்னிப்பாகவும், அவதானமாகவும் கேட்டுக்கிறேன்" என்று அவர் (ஜனாதிபதி) பகிரங்கமா கவே கூறியிருக்கிறார். அதற்குப் பிறகும் சில விடயங்களைக் கூறினார்.

அந்த நிகழ்ச்சியில் இராணுவத்தினர், இராணுவத் தளபவதிகள் குவிந்திருந்தனர். அவர்களுக்கு மத்தியில் நான் இதைக் கூறினேன். அதற்கான தைரியத்தை எமது கொள்கையும் எமது இலட்சியமும், எங்கள் மக்கள் தமது உயிர்களைப் பலி கொடுத்த தியாகமும்தான் எங்களைவளர்த்து அதைக்கொடுத்திருந்தது.

நாங்கள் அந்தப் பணியைச் செய்திருக்கின்றோம். எங்களுடைய வியர்வை, எங்களுடைய இரத்தம், எங்களுடைய உயிர் போய்விட்டது என்று சொல்லாத இடமில்லை.

அப்படிப்பட்ட நாம் அவர்களுக்கு முன் பேசுவதற்கு அஞ்சுவது கிடையாது.

நாங்கள் தந்திரோபாயமாக நடப்பது குறித்து – நீங்கள் உங்களுக்கு ஏற்றவாறு விமர்சிப்பது குறித்து – நாம் கவலைப் படவில்லை. உங்களை அதிகம் கவலைப்படவும் நாங்கள் விடமாட்டோம்.

இந்த மக்கள் விலைகொடுத்த இலட்சக்கணக்கான உயிர்களுக்கு – எங்களுடைய நீண்ட நெடிய போராட்டத்துக்கு ஒரு விடிவுக்கு – சர்வதேசத்தின் சந்தர்ப்பம் இராஜதந்திர ரீதியில் இருக்கின்ற இந்த நேரத்தில் இறுதிவரை அதைப் பயன் படுத்துவதற்கு – உங்கள் ஆணையைப் பயன்படுத்துவதற்கு – நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். அந்த ஆணையை நாம் வெறுமனே கைவிடவோ வீசவோ முடியாது.

மீண்டும், மீண்டும் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிட்டும் என்று அலட்டிக் கொள்ளுபவர்கள் மத்தியில் நீங்கள் எடுபடக் கூடாது. எந்த நேரத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தர்ப்பங்கள் வந்து சேர்வதில்லை – என்றார்.

# பூநகரி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் நேற்றுத் திறப்பு



கிளிநொச்சி, டிசெ.23

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சோ.சேனாதிராஜா ஆகியோர் இணைந்து பிரதேச செயலகப் புதிய கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். நினைவு பெயர் கல்வெட்டை மாவை சேனாதிராஜா திரை நீக்கம் செய்து வைத்தார்.

பூநகரி வாடியடிச் சந்தியில் அமைந்துள்ள புதிய பிரதேச செயலகக் கட்டடம் என்ரிப் திட்டத்தின் கீழ் 14 மில்லியன் ரூபா, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 60 மில்லியன் ரூபா நிதியுதவிகளுடன் அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பளை பிரதேச செயலர்கள், சர்வமத குருமார்கள், அரச உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் முப்படைகளின் தளபதிகள் பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-70)

# மன்னாரில் சுற்றுலா விடுதி

மன்னாரில் அரச சுற்றுலா விடுதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் நகரில் 12 அறைகள் கொண்ட மாடிக் கட்டட சுற்றுலா விடுதியை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜணீர அபேவர்த்தன நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைத்தார். மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அமைச்சின் செயலாளர் நீல் டி அல்விஸ், வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான எம்.மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர். (ஜ-112)



# உருக்குவேலையில் ஈடுபட்ட மூவர் தீ பரவியதால் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.23

கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் உள்ள இரும்பு உருக்கு வேலைத்தளத்தில் திடீரென ஏற்பட்ட வாயுக் கசிவால் தீக் காயங்களுக்கு உள்ளான மூவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் 3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஆனந்தராஜா சிவாகரன் (வயது 29), நடராஜா மதிராக் (வயது 24), பிரபாகரன் பார்த்தீபன் (வயது 21) ஆகிய மூவருமே காயங்களுக்குள்ளானவர்களாவர்.

இரவு நேரம் இரும்பு ஒட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்த போது எரிவாயு குழாயின் முன் சுரை கழன்றுள்ளது. இதனால் தீ வேகமாக பரவியதால் மூவரும் காயமடைந்துள்ளனர்.

அங்கு நின்றவர்களால் மூவரும் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# தடை செய்யப்பட்ட வலை பாவித்த மீனவருக்கு ரூ.25ஆயிரம் அபராதம்

முல்லைத்தீவு, டிசெ.23

கொக்கிளாய் கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட வலையைப் பாவித்து மீன்பிடித்த புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் தீர்ப்பளித்தார்.

கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை கொக்கிளாய் கடல் நீரேரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைக் கைது செய்வதற்குக் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் சென்றிருந்தனர்.

இதன் போது மீனவர்கள் மூவர் தமது படகுகளைக் கைவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். அவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமையை அடுத்து, அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். அந்த நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டமையை அடுத்து அதிகூடிய அபராதமாக 25 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது. (ஐ-9)

# இரு நூல்களின் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்ப்பாணப் பெட்டக அமைப்பின் அனுசரணையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ''ஆளுமைகள்'', ''வணக்கஸ்தலங்கள்'' ஆகிய இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

சேர்.பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா இடம்பெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதம நூலகரும் யாழ்ப்பாணப் பெட்டகத்தின் ஆலோசகருமான திருவாட்டி ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும் கௌரவ விருந்தினராக தமிழ்நாட்டு திரைப்பட இசையமைப்பாளர் ஆர். என்.வசந்த், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருவாட்டி வனஜா செல்வரட்ணம், காவேரி கலாமன்ற இயக்குநர் சபை உறுப்பினர் றஞ்சன் சிவஞான சுந்தரம், யாழ்ப்பாணம் அன்றாபிறிண்டேர்ஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் தளையசிங்கம் ஜெயறஜீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளியீட்டுரையை காவேரி கலாமன்ற இயக்குநர் வண. ரீ.எஸ்.ஜோசுவா அடிகளாரும், ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, யாழ்ப்பாண ஊடக கற்கைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரகுராம் ஆகியோரும் யாழ்ப்பாண பெட்டக இயக்குநர் மா. அருள் சந்திரனும் நிகழ்த்தவுள்ளனர். (இ)

# நல்லூரில் இன்று ஆன்மீக அருளுரை

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வல் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆன்மீக அருளுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை,'' இலக்கை அடைய மறுபிறப்பெடுத்துத் தவம் செய்ய வேண்டும்'' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரையை நிகழ்த்தப்படவுள்ளது. (இ)

# தகனத்துக்காக தயாரான சடலம் இறுதி நேரத்தில் அடக்கம்

## மல்லாகம் பதில் நீதிவானின் உத்தரவை அடுத்து

தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்வதற்காகத் தயார் நிலையில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த சடலம் இறுதி நேரத்தில் மல்லாகம் பதில் நீதிவானின் உத்தரவுக்கமைய அடக்கம் செய்யப்பட்டது.

மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச் சம்பவம் சுதுமலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

சுதுமலை தெற்கு , மாவடி வீதியைச்சேர்ந்த விமலேஸ்வரன் சுரேஷ் என்னும் 19 வயதுடைய இளைஞன் கடந்த திங்கட்கிழமை மானிப்பாயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பலனின்றி மறுநாள் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இவரின் மரணம் சம்பந்தமாக யாழ்.வைத்தியசாலையில் நடைபெற்ற மரண விசாரணையைத் தொடர்ந்து அன்று மாலை சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவரின் சடலம் நேற்று முன்தினம் புதன்கிழமை தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்வதற்காகச் சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மயானத்தில் எரிகொட்டகையில் விறகும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மல்லாகம் பதில் நீதிவானின் உத்தரவுக்கமைய சடலத்தை எரிக்காமல் புதைக்குமாறு மானிப்பாய் பொலிஸார் மூலம் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து சடலம் தாவடி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (இ-59)


**விஸ்டம்**
தொழில்நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
021 221 7860, 077 248 7774

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கி வரும் கல்வி நிறுவனம். பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரையாளர்களும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரியான வழியைத் தெரிவு செய்து NVQ படிநிலை ஊடாக தொழில்நுட்பவியல் பட்டமொன்றுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


# மாடுகள் கடத்தியோர் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி இரவு நேரம் மூன்று மாடுகளை சிறிய உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற இருவரை மண்டான் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்கள் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர். கரவெட்டி மேற்கு பகுதியில் இருந்து இரவு நேரம் மாடுகள் கடத்தப்படுகின்றன என நெல்லியடி பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது.

இதனையடுத்து மண்டான் பகுதிக்குச் சென்ற பொலிஸாரால் மாடுகள் கடத்திச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாடுகளை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்ற பொலிஸார், சாரதி உட்பட மேலும் ஒருவரை கைது செய்துள்ளனர். (ஐ-9)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தாரைவார்க்கும் அரசியல்

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதை ஆதரித்தமைக்காக இந்தியா விரைவில் வருந்தவேண்டி நேரும் என்று கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

முன்னர் பத்தாண்டுகளுக்கு மேல் ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு, 2015 ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டதன் மூலம் வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

அந்தத் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளராக நிறுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு, புதுடில்லியின் பின்புல ஆதரவும் ஆசீர்வாதமும் இருந்தது எனக் கருதப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான எதிரணி சக்திகளை ஒன்று திரட்டி, அதன் வேட்பாளராக மஹிந்த தரப்பில் இருந்த மைத்திரிபால சிறிசேனவையே வளைத்துப் போட்டுத் தெரிவு செய்து, அதற்கு ஒட்டுமொத்த எதிரணியின் ஆதரவையும் பெற்றுக் கொடுக்கும் ஒழுங்கமைப்பை ஏற்படுத்திக் கொடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மை இனத் தரப்புக்களை அதற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வைத்தமை வரை, பல தந்திரோபாய நகர்வுகளில் - உத்திகளில் - புதுடில்லியின் அரூபக்கரம் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஏன், இந்தத் தேர்தலில் தோற்ற பின்னர், மஹிந்த ராஜபக்ஷவே வெளிப்படையாக "இந்தியாவினால்தான் தோற்றேன்" என்று கூறியமை தெரிந்த விடயம்தான்.

அண்மையில் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்ட இந்தியாவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார செயலாளருமான சிவ்சங்கர் மேனன், 2009 யுத்தத்தின் இறுதிக்கட்டத்திலும், அதற்கு முன்னரும் பின்னரும் கூட, கொழும்பு - புதுடில்லி உறவு மிகவும் அந்நியோன்னியமாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

அப்படியாயின், 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கும் கூட்டு முயற்சிக்கு புதுடில்லியின் ஆசீர்வாதம் கிடைத்தமை எங்ஙனம்?

எல்லாவற்றுக்கும் இந்திய மத்திய அரசில் ஏற்பட்ட மாற்றமே காரணம். 2014 நடுப்பகுதியில் இந்தியாவின் மத்திய அரசை நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி கைப்பற்றியது. பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் டோவல் நியமிக்கப்பட்டார். இலங்கை உட்பட தென்னாசிய வட்டகை விடயத்தில் அவர் புதியதொரு நிலைப்பாட்டை புதுடில்லி சார்பாக எடுத்தார்.

மஹிந்த அரசு சீனாவுடனான நெருக்கத்தை முற்றாகத் துண்டிக்க வேண்டும் என்று எதிர்பார்த்த அவர், அதற்காக அழுத்தத்தை தாம் ஆட்சிக்கு வந்தவுடனேயே கொழும்புக்குக் கொடுக்க ஆரம்பித்தார். ஆனால் பொருளாதார விவகாரங்களில் சீனாவின் பேருதவியிலேயே பெரிதும் தங்கியிருந்த மஹிந்த அரசு அதற்கு மசியவில்லை; மசிய முடியவில்லை.

அதனாலேயே, தன் கைவரிசையை இலங்கையில் மீண்டும் காட்டியது புதுடில்லி. விளைவு - யாரும் எதிர்பாராத வகையில் மஹிந்த தோற்கடிக்கப்பட்டார்.

மஹிந்தரையும் அவரது அரசியல் தளபதிகளையும் ஆட்சிக் கூட்டில் இருந்து இறக்கிவிட்டு, அந்த இடத்திற்கு மைத்திரி - ரணில் கூட்டமைப்பு அதிகாரத்திற்கு வருவதையும் உறுதி செய்தது புதுடில்லி. அந்த அதிகார மாற்றத்தின் மூலம் தான் நினைத்ததைச் சாதித்து விட்டதாகப் புதுடில்லி தனக்குத் தானே திருப்திப்பட்டுக் கொண்டாலும், உண்மையில் அவ்வாறு நடக்கவில்லை என்பதுதான் இப்போது யதார்த்தமாக அம்பலமாகி வருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ அரசு விட்டுச் சென்ற பாரிய கடன் தொகையினால் பெரும் பொருளாதாரச் சுமையும், அழுத்தமும் எல்லை மீற, மீண்டும் வேறு வழியின்றி - மார்க்கமின்றி - சீனப் பக்கமே பிச்சைப் பாத்திரத்தை ஏந்தும் - இரக்கும் - நிலைமைக்குத் தள்ளப்பட்டது மைத்திரி, ரணில் கூட்டு அரசு.

மஹிந்த அரசு, சில மட்டுப்படுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகளுடன்தான் சீனாவை நாட்டுக்குள் எடுத்தது: அதனுடன் அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தங்களைச் செய்தது.

ஆனால் மைத்திரி - ரணில் அரசோ, தமக்குள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சீனாவிடம் சில விடயங்களை முற்றாக ஒப்படைக்கும் நிலைமைக்கு முன்வந்திருக்கின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்வாகத்தில் எண்பத்தியைந்து வீதத்தை சீன நிறுவனத்திடம் அது தாரை வார்க்கின்றது. அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத்துக்கும் அதேகதிதான் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த விடயங்களை மனதுக்குள் வைத்துக் கொண்டுதான், இலங்கையின் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியமைக்காக இந்தியா விரைவில் வருந்த வேண்டி வரும் என கோட்டாபய ராஜபக்ஷ கூறினாரோ என்னவோ தெரியவில்லை.

எனினும், அதிகம் சீனா பக்கம் சாய்வதால் இந்தியாவின் சீற்றத்துக்கு உள்ளாக நேரிடும் என அஞ்சும் மைத்திரி - ரணில் அரசு, இந்தியாவை தாஜா பண்ணுவதற்காக அதற்கு திருகோணமலையில் அபிவிருத்தி வலயம் என்ற பெயரில் ஒரு தாரைவார்ப்பை மேற்கொள்ளத் தயாராகிறது.

எது, எப்படியோ, நாட்டை இப்படி மாறி, மாறிபிற நாடுகளுக்கு அர்ப்பணம் செய்வது குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகிப் போய், கடைசியில் முழு நாடுமே தாரைவார்ப்பில் போய்விடாவிட்டால் அம்போதான்.

# ஏப்ரல் 10 இற்கு முன்னர் தேர்தல் நடத்த விருப்பம்

## ஆணைக்குழுத் தலைவர் தேசப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, டிசெ.23

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் நடத்த விரும்புவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலப் பகுதியில் தேர்தலை நடத்துவது வேட்பாளருக்கு சிரமங்களை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு 90 நாள்கள் தேவைப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தலை நடத்தி முடிப்பது பொருத்தமானது. பண்டிகைக் காலத்தில் வேட்பாளர்கள் தங்களது செயற்பாடுகளை மேற்கொள்ள சிரமப்படுவார்கள்."-என்றார். (எ)

# புதிய அரசமைப்பின் படியே தேர்தல்கள் நடத்த வேண்டும்

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

புதிய அரசமைப்பின் மூலம் பிரேரிக்கப்பட்ட தேர்தல் முறைமைக்கு அமைவாகவே அடுத்து வரும் சகல தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

அதற்கான ஆதரவை நாடாளுமன்றப் பிரதிநித்துவக் கட்சிகள் அனைத்தும் வழங்கியுள்ளது என்று மேலும் தெரிவித்தது.

மேலும் எல்லை நிர்ணய ஆணைக்குழு காலம் தாமதிக்காது செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தினுள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் தெரிவித்தபோதே கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"கடந்த காலத்தில் போன்று கலப்பு முறைமைத் தேர்தலை நடத்தாது மாற்று நடவடிக்கை ஒன்றைக் கையாள வேண்டும் என்ற அடிப்படையில் அரசு செயற்பட்டு வருகின்றது. அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

அதேபோல் எல்லை நிர்ணயம் முறையாக இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை சகல கட்சிகளாலும் முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைய சுயாதீன எல்லை நிர்ணய ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதாகக் கூறப்படுகின்றது. எனினும் சுயாதீன எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயற் பாடுகள் காலதாமதம் இன்றி சரியாக உரிய நேரத்தில் முன்வைக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். எனவே இந்த நடவடிக்கைகளில் துரித கதி இருப்பின் மாத்திரமே தேர்தலைச் சரியாக நடத்த முடியும்."- என்றார். (எ)

# தோல் பொருள்கள் பதனிடும் தொழிற்சாலை நிறுவ உதவுக

## ஐ.நா.குழுவுடனான கலந்துரையாடலில் அமைச்சர் ரிஷாத் கோரிக்கை



கொழும்பு, டிசெ.23

இலங்கையில் தோல் பொருள்கள் பதனிடும் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் ஐ.நா. செயற்பாட்டு நிறுவனம் உதவி வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக் குழுவிடம் கோரிக்கை விடுத்தார் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுத்தலைவர் சுதிர் என்.முரளிதாஸ் தலைமையிலான தூதுக்குழுவினர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

ஐ. நா. செயற்பாட்டு நிர்வாகம் இலங்கையில் /முன்னெடுத்து வரும் திட்டங்கள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன் போது அமைச்சர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

"உப்பு உற்பத்தியில் இன்னும் இரு வருடங்களுக்குள் இலங்கை தன்னிறைவு அடையும். அதற்கான பல்வேறு திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம்.

இந்த சுவதேச நிறுவனமானது எதிர்காலத்திலும் இலங்கைக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் இருக்கின்றன. அவற்றை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாக இருக்கின்ற போதும் உப்புக்குத் தட்டுப்பாடே நிலவுகின்றது.

உப்பை நாம் இறக்குமதி செய்கின்ற துர்ப்பாக்கிய நிலையிலேயே இன்னும் இருக்கின்றோம். எனவே எமது கடல் வளத்தைப் பயன்படுத்தி உப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாம் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தை வளப்படுத்துவதற்கு அங்கேயுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். எனவே, ஐ.நா. செயற்பாட்டு நிறுவனம் இந்த முயற்சிக்கு உதவுவதோடு கிழக்கிலும் நாம் அடையாளங்கண்டுள்ள பிரதேசங்களில் உப்பு விளைச்சலை அதிகரிக்க உதவ வேண்டும்.

அத்துடன் இலங்கையில் தோல் பொருள்கள் பதனிடும் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் ஐ.நா. செயற்பாட்டு நிறுவனத்தின் உதவியைக் கோருகின்றோம்.

இந்த முயற்சியில் இலங்கை அரசும் வழங்குநர்களும் ஐ. நா. செயற்பாட்டு நிறுவனமும் இணைந்து பணியாற்றுவதன் மூலம் உரிய இலக்கை அடைய முடியும்."-என்றார். (எ)

### நாளை

24.12.2016
சனிக்கிழமை
திதி : ஏகாதசி பி.இ. 5.25 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.இ. 2.46 வரை

சுபநேரம் : 3.26 – 4.56
இராகுகாலம் : 9.26 – 10.56

# எமது எதிர்கால சந்ததியினருக்காக சிறந்த நாட்டை உருவாக்குவேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

எதிர்காலச் சந்ததியினருக்காக சிறந்தவொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமுர்த்தி சிறுவர் சமூக, கலாசாரம் மற்றும் இலக் கிய நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாளைய உலகை வெல்லும் நாட்டை, பிள்ளைகளின் கைகளில் மறைந்துள்ள ஆக்கத்திறன்மிக்க கலை இலக்கிய ஆற்றல்களுடன் உணர்வுபூர்வமான எதிர்கால சந்ததியினரை கொண்டதாக கட்டியெழுப்பும் நோக்குடன், சமுர்த்தி கெகுளு சிறுவர் சமூகத்தின் ஊடாக இலக்கிய விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு:-

வலுவான எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதே நாட்டு மக்களின் எதிர்காலத்துக்காக எமக்கு வழங்கப்பட்டுள்ள உயரிய பொறுப்பும் கடமையுமாகும்.

எதிர்கால சந்ததியினருக்காக சிறந்தவொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

நாட்டின் கலாசாரம் மற்றும் இலக்கியம் என்பவற்றுடன் இணைந்த சிறந்த எதிர்கால சந்ததியினராகப் பிள்ளைகளைக் கட்டியெழுப்பும் பொறுப்பு அனைவரிடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல இன மக்களுக்கும் இடையில் சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை ஏற்படுத்துவோம். நல்லிணக்க செயற்பாடுகளை வெற்றி கொள்வதற்கும் கலாசாரம் மற்றும் இலக்கியம் என்பன மிக முக்கியமான காரணிகளாக அமைகின்றன.- என்றார்.

இந்த நிகழ்வில், விசேட ஆற்றல்களை வெளிக்காட்டிய சிறுவர், சிறுமிகளுக்கான பரிசில்கள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

சிறுவர் கெகுளு சமூகத்தை நெறிப்படுத்தும் மாவட்ட செயலாளர்களுக்கும், திவிநெகும திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இதன்போது விருதுகளும் வழங்கப்பட்டன.

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அமைச்சின் செயலாளர் மகிந்த செனெவிரத்ன, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நீல் பண்டார ஹபுஹின்ன ஆகியோர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.(ஐ)



## சைக்கிள் உரிமையாளர் ஆதாரம்காட்டி பெறலாம்

நெல்லியடி,டிசெ.23

ஐம்பதுக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் பாதுகாப்பில் உள்ளன. அவற்றைப் பார்வையிட்டு தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த தெரிவித்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் மீட்கப்பட்ட சைக்கிள்களே நெல் லியடிப் பொலிஸில் உள்ளன. அவற்றை அடையாளம் கண்டு தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறின் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ-40)

# போதைப் பொருள் அச்சுறுத்தல்களை தடுக்க நாம் ஒன்றிணைய வேண்டும்

## யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு






யாழ்ப்பாணம், டிசெ.23

இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தல் வர்த்தகம் தொடர்பில் தற்போதும் புதியதொரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அத்தகைய அச்சுறுத்தலை அனைவரும் ஒன்றிணைந்தே இல்லாமல் செய்ய வேண்டும்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் அதிக போதைப் பொருள் கடத்தல் முறியடிப்புக்களை மேற்கொண்ட பொலிஸாருக்கும் அதிக குற்றங்களைக் கட்டுப்படுத்த உதவிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பரிசளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வடமாகாணத்தில் கேரளக் கஞ்சா கடத்தல் நடவடிக்கை அதிகளவாக இடம்பெறும் பகுதியாக காங்கேசன்துறை பகுதியே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இந்தப் பகுதியில் திறமையாகக் கடமையாற்றும் பொலிஸார் இந்தக் கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்து விடுகின்றார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

கஞ்சா இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு இங்கே விற்கப்படுகின்றது. இதற்கு அதிக எண்ணிக்கையான இளைஞர்கள் அடிமையாகியுள்ளார்கள்.

இவற்றைவிட தற்போது இலங்கை மேலும் பெரியளவில் போதைப் பொருள் கடத்தலுக்குள் சிக்கியுள்ளது. அதாவது கொக்கையின் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையானது இலங்கை ஊடாக அதிகரித்துள்ளது. இவ்வாறான கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

கொக்கையினானது கேரளக் கஞ்சாவை விடவும் அதிக மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். கொக்கையினானது வடக்கு மாகாணத்துக்கும் பரவிடக் கூடிய சாதகமான நிலைமைக்கு இடம் கொடுக்காத வகையில் நாம் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைப்பு இருந்தால் தான் சாத்தியமாக்க முடியும்.

தற்போது போதைப் பொருள் கடத்தல்களை முறியடித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சன்மானமும் கௌரவமும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களும் இவர்கள் போன்று செயற்பட வேண்டும் என்ற எண்ணப்பாட்டைத் தூண்டுவதற்காகவே.-என்றார். (ஐ-18)



நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், பிரித்தானிய கொன்சவேட்டிவ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான ஜேம்ஸ் பெர்யை, நாடாளுமன்ற வளாகத்திலுள்ள போர்ட்கலிஸ் இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரித்தானிய கிளையின் இணைப்பாளர் சாம் சம்பந்தனும் கலந்து கொண்டார். (ஐ)

## பருத்தித்துறை சாயி நிலையத்தில் நத்தார் நிகழ்வு

பருத்தித்துறை பகவான் ஸ்ரீசாயி சேவா நிலையத்தில் நத்தார் பண்டிகை நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 6 மணிக்கு பருத்தித்துறை சாயி மந்திர் தலைவர் சி. பிரசாத் தலைமையில் ஆரம்பமாகும் நிகழ்வில் கொடியேற்றம், காயத்திரி ஜெபம் ஆகியவற்றைத் தொடர்ந்து 'நத்தார் செய்திகள்' என்னும் தலைப்பில் பருத்தித் துறை பங்குத்தந்தை அருட்திரு. யாவிஸ் அடிகளாரின் சிறப்புரை இடம் பெறும்.

தொடர்ந்து சாயிமந்திர் ஆன்மீக இணைப்பாளர் ஆ. ஜெகநாதன் 'சாயி அவதார மகிமை' என்னும் தலைப்பிலும் சாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழுத் தலைவர் கா. சிவ நேசன் சிறப்புரையையும் சாயி மந்திர் பொருளாளர் மு.சீராள கந்தபாலன் 'சர்வமதப் பிரியர் சாயி' என்னும் தலைப்பிலும் உரையாற்றுவார்கள். நத்தார் பாப்பா செய்தியும் இடம் பெறும். (இ -30)

# தபால் பெட்டிக்குள் வெற்றிலைத் துப்பல்

## பொலிஸார் விசாரணை

வடமராட்சி,டிசெ.23

வெற்றிலைத் துப்பலைத் துப்பி தபால்களைச் சேதமாக்கிய விஷமிகள் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நாடு தழுவிய ரீதியில் தபால் ஊழியர்கள் இரண்டு நாள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தினர். இதனால் தபால் சேவைகள் முடங்கியிருந்தன.

தபால் பெட்டிகளுக்குள் தபால்கள் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் நேற்று காலையில் நெல்லியடி பஸ்தரிப்பு நிலையத்தில் உள்ள தபால் பெட்டிக்குள் இருந்த தபால்களை எடுக்கச் சென்ற ஊழியர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அதாவது அங்கிருந்த தபால்கள் வெற்றிலைத் துப்பல்களால் தோய்ந்திருந்தன. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கும், தபால் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கின்றனர். (ஐ - 4

## தமிழ், முஸ்லிம்களுக்கு இடையே நிலவும்
# காணிப் பிரச்சினையைத் தீர்க்காத கூட்டமைப்பினர் இணைப்புக்கு எவ்வாறு ஆதரவு கேட்க முடியும்
### கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கிடையில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் வட்டமடு காணிப் பிரச்சினையை சமாதானமாக தீர்த்து இரு சமூகங்களினது நம்பிக்கையைப் பெறும் சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவற விட்டு விட்டனர். இந்நிலையில் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டிக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்க வேண்டுமெனக் கோருவது எந்தவகையில் நியாயமாகும்?

-இவ்வாறு கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் விவசாய அமைச்சுக்கான நிதியொதுக்கீடு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ள காணிப்பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வுகளைக் கண்டு சமூகங்களுக்கு இடையே நம்பிக்கை எற்படுத்தத் தவறி விட்டனர்

கடந்த காலங்களில் நாங்கள் அமைச்சர்களாக பதவி வகித்த போது மூவின மக்களுக்கும் இன, பேத, பிரதேச வேறுபாடின்றி பணிபுரிந்துள்ளோம். ஆனால், கூட்டமைப்பினர் கிழக்கு மாகாணத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இன்று வரை முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையைப் பெற சந்தர்ப்பம் கிடைத்தபோதும் அதனைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

பேச்சளவில் நாம் சகோதரர்களாக வாழ்வோம் எனக் கூறினால் மட்டும் போதாது. இரண்டு சமூகங்களுக்கு இடையில் பிரச்சினைகள் ஏற்படும் போது அச்சமூகங்களுக்கு இடையே சமரச முயற்களை செய்து பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகளை காண வேண்டும். இல்லாவிடின் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படுவது தவிர்க்க முடி யாதொன்றாகி விடும்.

விவசாய பொருளாதாரத்தை உயிராகக் கொண்டது கிழக்கு மாகாணம். நாட்டின் நெல் உற்பத்தியில் இம்மாகாணமே அதிக பங்கை வழங்கி வருகின்றது. யுத்தம், இயற்கை அனர்த்தம் மற்றும் வறுமை, வரட்சி என்பவற்றினால் பாதிக்கப்பட்ட இங்குள்ள ஏழை விவசாயிகளின் பொருளாதார வாழ்வாதார அபிவிருத்திக்கு இந்த விவசாய அமைச்சினூடாக அதிக பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும்.-என்றார். (ச)

## திருமலையில் விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் சாவு

திருகோணமலை-ஹொரவப்பொத்தானை பிரதான வீதியில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

மஹதிவுல்வெவ திம்பிரிவெவ பகுதியைச்சேர்ந்த எஸ்.சுகத் பண்டார (46வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மஹதிவுல்வெவ குளத்தில் மீன் பிடித்து விட்டு வீதியோரமாகச் சென்றவரை லொறி ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்திருக்கின்றது. (ச)

# கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான நிதி: தொடர்ந்தும் அரசை வலியுறுத்துவோம்
### கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் தெரிவிப்பு

அரசு இப்போது மோசமான நிதி நெருக்கடியில் உள்ளது. இவ்வாறான நிலைமையிலும் மக்களின் தேவைகளையும், குறைகளையும் முதன்மைப்படுத்தி அவற்றுக்கான நிதியை வழங்குமாறு அரசைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறோம். கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான நிதியை நாம் எந்த வகையிலேனும் கொண்டு வந்து சேர்க்கின்றோம். சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தமது வீட்டுக்கு அருகில் உள்ள வீதிகளையும், வடிகான்களையும் செப்பனிடக் கொடுக்கும் முன்னுரிமையை மக்கள் துயர்படும் பகுதிகளுக்கு வழங்குவது இல்லை.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் மழைக் காலங்களில் அடிக்கடி வெள்ளத்தினால் பாதிக்கப்படும் பல பகுதிகளுக்கு கழிவு நீர் அகற்றும் கட்டமைப்பிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மிச்நகரில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தக்வா பள்ளிவாசல், ஷாகிர் மௌலானா வித்தியாலயம் மற்றும் மிச் நகர் பாடசாலை, மிச் நகர் பள்ளிவாசல், ரயில்வே கடவை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 2500க்கு மேற்பட்ட குடும்பங்கள் மழைக் காலங்களில் வீடுகளை விட்டு வெளியேறி அடிக்கடி பொது இடங்களில் தங்க வேண்டி இருந்தது.

கழிவுநீர் அகற்றும் கட்டமைப்பு போதிய அளவில் இன்மையே நீர் தேங்குவதற்குக் காரணம்.

இதனால் உடனடியாக அதனை நிவர்த்தி செய்து மக்கள் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு கோரிக்கை விடுத்திருந்தேன். இந்த நிலையில் அதனை ஏற்றுக் கொண்ட இடர் முகாமைத்துவ அமைச்சர் உடனடியாக தமது அமைச்சில் 36 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி அந்த திட்டத்தை ஆரம்பிக்க ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். இதன் அடிப்படையில் இங்கு வெள்ள நீரை வடிந்தோடச் செய்ய 5 மதகுகள் மற்றும் கழிவகற்றும் கட்டமைப்பு ஆகியன நிர்மாணிக்கப்பட உள்ளன. மாரி காலத்தில், மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வரும் வெள்ளப் பாதிப்பைத் தடுக்க அவசரமாக எடுத்த முயற்சிக்கு பயன் கிட்டியுள்ளது.-என்றார். (ச)

## மாகாணசபை கணக்காய்வாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்
### தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கோருகிறார்

திருகோணமலை,டிசெ.23

கிழக்கு மாகாணசபையின் கீழ் உள்ளகக் கணக்காய்வாளர்களாக 10 வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றி வருபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாணசபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கோரிக்கை விடுத்தார்.

2017ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாணசபையின் வரவு -செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருந்த சுமார் 11 பேர் கணக்காய்வு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் உள்ளது.


பிரதேச சபை மற்றும் நகர சபையில் ஏற்படும் ஊழல் நடவடிக்கைளை இவர்கள் போன்ற உத்தியோகத்தர்கள், உள்ளகக் கணக்காய்வைச் செய்து வெளிக்கொணரப் பயன்படுத்தப்பட்டனர். எனவே இந்த விடயம் தொடர்பில் முதலமைச்சர் கவனம் செலுத்தி, அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் .- என்றார். (ச)

## செங்கலடி மத்திய கல்லூரியில் திருட்டு: மாணவர்கள் மீது பொலிஸ் முறைப்பாடு!

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட செங்கலடி மத்திய கல்லூரியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கோரி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது பரீட்சையின் இறுதி நாள்களாகிய கடந்த 15 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் பாடசாலை உடைமைகளான நீர்த்தாங்கி, பூச்சட்டிகள் மற்றும் யன்னல் கண்ணாடி, மரத்தினாலான யன்னல், நீர்க் குழாய் போன்ற பொருள்கள் சேதப்படுத்தப்பட்டிருந்ததுடன் சில களவாடப்பட்டும் இருந்தன.

இந்நிலையிலேயே பாடசாலை நிர்வாகத்தினால் இடம்பெற்ற முதல்கட்ட விசாரணையின் போது சந்தேகத்தின் அடிப்படையில் 13 மாணவர்கள் இனம் காணப்பட்டனர். இதனையடுத்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டது.(ச)

## 25 அடி பள்ளத்தில் குடைசாய்ந்தது டிப்பர் மயிரிழையில் உயிர் தப்பினார் சாரதி!



செங்கலடி,டிசெ.23

செங்கலடி பதுளை வீதியால் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி 25 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் டிப்பர் வாகனத்தைச் செலுத்திச் சென்ற அதன் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார்.

பின்னால் வந்து கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸுக்காக இடம்விட்டு ஓரத்தில் தரித்து நின்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பள்ளத்தில் வீழ்ந்த டிப்பர் சில மணிநேரங்களுக்குள் பத்திரமாக மீட்கப்பட்டது என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## படகு கவிழ்ந்ததில் ஒருவர் சாவு!

அம்பாறை - பொத்துவில் கடற்பகுதியில் மீனவப் படகு ஒன்று கவிழ்ந்ததில் நேற்று வியாழக்கிழமை காலை ஒருவர் உயிரிழந்தார்.

கலேவல - மன்கொல கொல்ல பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய மீனவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (ச)



*கோரளைப்பற்று பகுதி சமுர்த்தி பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.*

*நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டார்.*

*இதில் வாழ்வின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச)*

# சீனாவுக்கு வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கரில் 95 வீதமானவை அரச காணிகள் என்கிறார் அமைச்சர்



கொழும்பு, டிசெ.23

அம்பாந்தோட்டையில் சீனாவுக்கு வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளில் 95 வீதமானவை அரச காணிகளே என்று சர்வதேச வர்த்தக, அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவுக்குவழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளில், சுமார் 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இனங்காணப்படும். ஏனைய 10 ஆயிரம் ஏக்கர் காணிகள், மொனராகல, மாத்தறை மாவட்டங்களில் ஒதுக்கப்படும்.

இந்த தேவைக்காக காடுகளோ, வனவிலங்குப் பாதுகாப்பிடங்களோ பயன்படுத்தப்படமாட்டா.

தனியார் காணிகள் உரிமையாளர்களின் ஒப்புதலுடன் மாத்திரம், தகுந்த இழப்பீடு வழங்கப்பட்டே இதற்காக பெறப்படும். சுமார் 200 வீடுகள் மாத்திரமே, இந்த திட்டத்துக்காக இடமாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கும்.

நெடுஞ்சாலை அபிவிருத்திக்காக காணிகள் பெறப்படுவதில் கையாளப்படும் அதே அணுகுமுறை தான் இங்கும் கையாளப்படும்.

15 ஆயிரம் ஏக்கர் காணிகளும் ஒரே தடவையில் முதலீட்டாளர்களிடம் வழங்கப்படமாட்டா. மூன்று கட்டங்களாகவே நிலங்கள் வழங்கப்படும்.

இந்தப் பொருளாதார வலயத்தில், 2 ஆயிரத்து 400 தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் 4 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இந்தப் பகுதியில், இயற்கை எரிவாயு மின் நிலையம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், கப்பல்களைப் பழுதுபார்க்கும் தளம் என்பனவும் அமையவுள்ளன. இதன் மூலம் இலங்கைக்கு 4 பில்லியன் டொலர் முதலீடுகள் கிடைக்கும்.

நாட்டில் வேறு பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளும் இந்த வலயத்துக்கு மாற்றப்படும். அம்பாந்தோட்டை துறை முகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டை இரண்டாவது தவணைக்காலத்துக்கு நீடிக்க முடியாது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனக் கடற்படை அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பயன்படுத்தக் கூடும் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைத் துறைமுகம் வணிகச் செயற்பாடுகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும். இந்த நிபந்தனை கடுமையாக நடைமுறைப் படுத்தப்படும்.

இலங்கைக் கடற்படைதவிர வேறெந்த இராணுவப் பிரசன்னத்துக்கும் இங்கு இடமளிக்கப்படமாட்டாது.

துறைமுகத்தின் பாதுகாப்புக்கு இலங்கைக் கடற்படை, பொலிஸார், துறைமுக அதிகாரசபை என்பனவே பொறுப்பாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## லிந்துலை விபத்தில் இருவர் பலி





நுவரெலியா, டிசெ.23

நுவரெலியா லிந்துலை மெராயா - ஊவாக்கலைத் தோட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நீர் தாங்கியை கொண்ட இழுவை வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 600 அடிப் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில், லிந்துலை - ஊவாக்கலை தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய வன்னராஜா சரன்ராஜ் மற்றும் 37 வயதுடைய ஞானபண்டிதரம் சுரேந்திரன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ராஜகிரிய விபத்தில் மூவர் படுகாயம்



கொழும்பு, டிசெ.23

கொழும்பு,ராஜகிரிய ஒபேசேகரபுர வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

காரொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், காயமடைந்த மூவரும் கொழும்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை கடற்படைக்கு கப்பல் வழங்குகிறது ஜப்பான்



கொழும்பு, டிசெ.23

இலங்கைக் கடற்படைக்கு கப்பல் ஒன்றை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜப்பானின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஹிரோயுகி மியாசாவா, இதனைத் தெரிவித்துள்ளார் என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்-இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்பதற்காக, ஜப்பானின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஹிரோயுகி மியாசாவா இலங்கைக்கு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் இந்த பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, பிராந்திய நிலைமைகள், பாதுகாப்புக் கொள்கை, பாதுகாப்பு ஒத்துழைப்பு, பரிமாற்றங்கள் உள்ளிட்ட இருதரப்புப் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தவும் ஜப்பான் முழுமையான ஆதரவை வழங்கும் என்று, ஜப்பானிய உதவிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு, கடற்படைக் கப்பல் ஒன்றை வழங்குவதற்கும், இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும், ஜப்பானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையிடம் அதிருப்தியை வெளியிட்டது சீனா

கொழும்பு, டிசெ.23

அம்பாந்தோட்டையில் காணிகளை அபகரிக்க சீனா முனைவதாக, மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் தொடர்பாக இலங்கை அரசிடம் சீன அரசு அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைச்சிறப்பு பொருளாதார வலயத்துக்குக் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன என்று பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்கள் தொடர்பாக, சீன அரசாங்கத்திடம் மூன்று சீன நிறுவனங்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

கடந்த 6 ஆண்டுகளாக இலங்கையில் இயங்கிவரும் இந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு சீன அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது.

அத்துடன், சீனா தொடர்பாக முன்னெடுக்கப்படும் பொய்யான பரப்புரைகள் குறித்து அதிருப்தியடைவதாகவும், சீன அரசினால் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினரே, அம்பாந்தோட்டையில் சிறப்பு பொருளாதார வலயத்தை அமைக்கும் திட்டத்துக்கு எதிராக பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைவருக்கும் சமமான நீதி வழங்க அரசு முன்வரவேண்டும்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு





வவுனியா, டிசெ.23

யுத்தத்தில் அழிவுகளை ஏற்படுத்தியவர்களுக்கு ஒரு நீதியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நீதியும் வழங்குகிறது தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற இந்த அரசு. இது மிகுந்த வேதனை அளிக்கிறது. புதிய அரசமைப்பில் இலங்கையர்கள் என்ற சம அந்தஸ்து உறுதிப்படுத்தப்படும் என்று கூறப்படுகின்ற நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடுகளும் கொண்டுவரப் படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் வவுனியா கனகராயன்குளம் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது அவர் தெரிவித்துள்ளவை வருமாறு-

கடந்த முப்பது வருட கால யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், போராளிகள் உயிர் நீத்திருக்கிறார்கள். அவயவங்களை இழந்திருக்கிறார்கள். யுத்தம் முடிந்து 8 வருடங்களாகின்றன. இற்றை வரைக்கும் உயிர் நீத்தவர்களுக்கான நஷ்டஈடோ, ஊனமுற்றவர்களுக்கான நிரந்தர வாழ்வாதாரத்துக்கான கொடுப்பனவோ வழங்கப் படவில்லை.

யுத்தத்தை நடத்திப் பல்வேறு அழிவுகளையும் ஏற்படுத்தியோர் குற்றத்தில் ஈடுபட்ட மற்றும் மனித உரிமைகளை மீறிய முப்படையினரில் உயிரிழந்தவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் பல்வேறுவிதமான விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

மறுபுறத்தில் போரால் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட சில தமிழ் மக்களுக்கு 4 ஆயிரம் ரூபா வீதம் கொடுக்கப்படுவதைத் தவிர, தற்போதைய வரவு செலவுத் திட்டத்தினூடகவும் வேறு எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

யுத்தத்தில் அழிவுகளை ஏற்படுத்தியவர்களுக்கு ஒரு நீதியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நீதியுமாக தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற இந்த அரசு நடந்துகொள்வது மிகுந்த வேதனையளிக்கிறது.

போரால் தமது அவயவங்களை இழந்த ஒவ்வொருவருக்கும் முப்படையினருக்கு வழங்கப்படும் அதேவிதமான சலுகைகள் வழங்கப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக புதிய அரசியலமைப்பில் அவர்கள் தொடர்பான விசேட சட்ட ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பு, கல்வி, வாழ்வாதாரம், மருத்துவம், போன்ற விடயங்களில் அவர்கள் தொடர்பில் அதி கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.-என்றார்.

வவுனியா வடக்கில் மாற்றுத் திறனாளிகளுக்காகச் சேவையாற்றி வரும் இணையும்கரங்கள் அமைப்பின் தலைவர் அமிர்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா, வவுனியா வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் தணிகாசலம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேசச் செயலகத்தின் உதவி பிரதேச செயலர் நிவேதிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது ரி.ஆர்.ரி. வானொலியின் அனுசரணையுடன் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் 307 வறியமாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அதற்கான நிதி உதவியைப் புலம்பெயர் உறவுகளான மோகனதாஸ் (பிரான்ஸ்), இராஜரட்னம் (லண்டன்) சிவ லிங்கம் (டென்மார்க்) ஆகியோர் வழங்கியிருந்தனர். (ஐ-100)

## பட்டிவலைத் தொழிலை நிறுத்தக் கோரி வங்காலை மீனவர்கள் போராட்டம்

மன்னார், டிசெ.23

மன்னாரில் பட்டிவலை மீன்பிடி தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய, மன்னார் கடற்றொழில் திணைக்களம் எடுத்த முயற்சிக்கு இடையூறு விளைவித்ததைக் கண்டித்து, இதனால் பாதிப்புள்ளாகி வரும் வங்காலை மீனவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் தென்கடலில் முருகைக்கற் பாறைத் தொடருக்கண்மையில் பட்டிவலைத் தொழில் மன்னார் பணங்கட்டுகொட்டு மீனவர்கள் ஈடுடுகின்றனர். அதை நிறுத்துவது சம்பந்தமாக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம், மன்னார் பணங்கட்டுகொட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிவுற்றுள்ளது.

இந்த நிலையில் பனங்கட்டுகொட்டு மீனவர்களால் தென்கடல் பகுதியில் மேற்கொள்ளப்படும் பட்டி வலைகளை பொலிஸ் மற்றும் கடற்படையினர் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை புதன்கிழமை மேற்கொண்டனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் பனங்கட்டு கொட்டு மீனவர்கள் மன்னார் நகர்ப் புறத்தில் வீதியில் இறங்கி இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

மன்னாரில் அமைதியை நிலை நாட்டும் நோக்குடனும் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு மன்னார் பொலிஸ் அதிகாரிகள் முனைந்தனர்.

இதனையடுத்து பனங்கட்டுகொட்டு மீனவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். அத்துடன் தென்கடல் பகுதியிலுள்ள பட்டிவலைகள் அகற்றும் பணியும் இடைநிறுத்தப்பட்டது.

இதேவேளை, சட்டமா அதிபர் திணைக்களத்தால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தலின்படி பட்டிவலைத் தொழில் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளும் படியும் தென்கடலில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்டிவலையை திட்டமிட்டபடி உடன் அகற்ற கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்று தெரிவித்தும் வங்காலை மீனவர்களும் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-112)

## சிவநகர் சனசமூக நிலையத்துக்கு அன்பளிப்பாக கிடைத்த நூல்கள்!



கிளிநொச்சி, டிசெ.23

கரைச்சி சிவநகர் சனசமூக நிலையத்தின் நூலகத்துக்கு கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள மெதடிஸ் கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவி நிருத்திகா சிறிதரன் தனது கற்கையின் ஒரு பகுதியாக சமூகச் செயற்பாட்டு திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நூல்களைக் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சிவநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

சிவநகர் முதியோர் சங்க அனுசரணையில் சிவநகர் சன சமூக நிலைய மண்டபத்தில் சிவநகர் முதியோர் சங்கத் தலைவர் அ.ரகுபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்டு நூல்களைக் கையளித்துள்ளார். (ஐ-70)

## வவுனியாவில் அரச வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்

### மஸ்தான் எம்.பி. கோரிக்கை

வவுனியா, டிசெ.23

வவுனியா மாவட்டத்தில் உள்ள அரச வெற்றிடங்களை நிரப்ப உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்னி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.கே. மஸ்தான் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலில் உரையாற்றும் போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

மக்களுடைய ஒவ்வொரு விடயங்களுக்கும் கிராம அலுவலரின் சிபார்சு தேவைப்படுகிறது. அதனைப் பெறுவதற்கு மக்கள் மிகவும் சிரமம் அடைகின்றனர். கிராம சேவையாளர்களும் தமது வேலைகளைச் சிரமம் பாராது செய்கின்றனர். ஆள் பற்றாக்குறை காரணமாக அவர்கள் ஒவ்வொருவரும் பல இடங்களைப் பார்ப்பதால் அவர்கள் தமது வேலைகளை இலகுவாகச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. மக்களும் தமது சேவைகளை பெறமுடியாத சூழல் உள்ளது.

எனவே எமது மாவட்டத்தில் காணப்படும் கிராம அலுவலர் பற்றாக்குறை, சமுர்த்தி அலுவலர் பற்றாக்குறை மட்டுமன்றி அரச அலுவலர்களுக்குப் பல திணைக்களங்களிலும் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்ய உள்ளநாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆள்பற்றாக்குறை காரணமாக சில அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பல வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் தமது வேலைப்பளு காரணமாக மக்களுக்கு திறப்பட சேவையாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விரைவாக இங்குள்ள வெற்றிடங்களை நிரப்பும் பட்சத்தில் விரைவான அபிவிருத்தி நோக்கி நகர முடியும்.- என்றார். (ஐ-100)



# ஏழை மக்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.

**எம்.ஜி.ஆர். மறைந்து 29 வருடங்கள். நாளை டிசெம்பர் 24 அவரது நினைவுதினம். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

மருதூர் கோபாலன் ராமச்சந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட எம்.ஜி.ஆர். 'எம்.ஜி. ராமச்சந்திரன்', 'எம்.ஜி.ஆர்' என்று அன்போடு அழைக்கப்பட்டார். இந்தியாவின் தலைசிறந்த நடிகராகவும், தயாரிப்பாளராகவும், அரசியல் வாதியாகவும் இருந்தார்.

அவருடையவாழ்க்கையில், நடிப்பும், அரசியலும் முக்கிய பகுதிகளாக இருந்தன. இளமைக் காலத்திலேயே, பல நாடக குழுக்களில் பிரபலமாக திகழ்ந்தார். காந்தியின் மீதும் அவரது கொள்கைகள் மீதும் மிகவும் பற்றுடையவராக இருந்ததால், இளம் வயதிலேயே இந்திய நேஷனல் காங்கிரஸில் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 100 க்கும் மேற்பட்ட திரைப் படங்களில் நடித்த எம்.ஜி.ஆர்., தமிழ் திரையுலகை முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆதிக்கம் செய்தார். பின்னர், தி.மு.க. அரசியல் கட்சியுடன் கைகோத்தார்.

ஒரு தமிழ் நடிகர் என்ற மகத்தான புகழ் பெற்றிருந்தாலும், எம்.ஜி.ஆர். சமமான வெற்றிகரமான அரசியல் வாழ்க்கையையும் அனுபவித்தார். தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டபின், அவர் தனது சொந்தக் கட்சியான அ.தி.மு.கவை உருவாக்கினார். மக்கள் எம்.ஜி. ஆரை மிகவும் நேசிக்க முக்கிய காரணம், அவர் ஏழை மக்களின் இதய தெய்வமாக விளங்கினார். நாட்டின் மாநில முதலமைச்சர் நாற்காலியை ஆக்கிரமித்த, முதல் இந்திய திரையுலக பிரமுகர் என்ற பெருமை எம்.ஜி.ஆர். அவர்களையே சேரும்.

எம்.ஜி. ஆரின் பெற்றோர் மேலக்காடு கோபால மேனன் மற்றும் மருதூர் சத்யபாமா. கேரளாவின் பாலக்காடு பகுதியில்வடவனூர்பகுதியில் வசித்து வந்தனர். எம்.ஜி.ஆரின் தந்தை வழக்கறிஞர் என்பதால், அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் இருந்தன. இதன் காரணமாக அவர் கேரளாவிலுள்ள தனது சொந்த வீட்டில் இருந்து தப்பி ஓடினார். அவர் இலங்கையில் வாழ்க்கையைத் தொடங்கினார். மேலக்காடு கோபால மேனன் இலங்கையில் மருதூர் சத்யபாமா என்பவரை திருமணம் செய்தார்.

இலங்கையில் ஜனவரி 17, 1917 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். பிறந்தார். எம்.ஜி.ஆர். இந்து மதத்தைத் தீவிரமாக நம்பினார். முருகப் பெருமானைத் தனது ஆஸ்தான கடவுளாக வழிபட்டார்.

எம்.ஜி.ஆர். தனது இளமைப் பருவத்திலேயே, நடிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் சிறுவனாக இருந்த போதே அவரது தந்தை இறந்துவிட்டார். அவரது தந்தையின் மறைவுக்குப் பின், குடும்ப சூழ்நிலைகளின் காரணமாக படிப்பைத் தொடர முடியாமல், பணம் சம்பாதிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டதால், இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், தனது பெயரை முதல்முறையாக 'ஓரிஜினல் பாய்ஸ்' என்ற நாடகக் குழுவில் பதிவு செய்தார்.

சில ஆண்டுகளுக்கு பிறகு, நாடகத்தில் நடிப்பதை விட்டுவிட்டு, 1935இல் தமிழ் திரையுலகில் சேர்ந்தார். 1936இல் 'சதிலீலாவதி' என்ற படத்தில் துணை கதாபாத்திரமாக முதல்முறையாக நடித்தார். 1940 களில்தான் அவருக்கு முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.

தமிழ் சினிமாவிலேயே இதுவரை பார்த்திராத வர்த்தக ரீதியான ரொமாண்டிக் மற்றும் ஆக்ஷன் ஹீரோ என்று அவரை உருவாக்கிய படம், 'இராஜகுமாரி'. இது கலைஞரால் எழுதி உருவாக்கப்பட்டது. 1947இல், 'இராஜகுமாரி' திரைப்படம் தமிழக திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. பின்னர், தமிழ் திரையுலகம் மூன்றுதசாப்தங்களுக்கும் எம்.ஜி.ஆரை முழக்கமிட்டது. 1956 இல், எம்.ஜி.ஆர். திரையுலகில் தயாரிப்பாளராகவும், இயக்குநராகவும் உருவெடுத்தார். அவர் இயக்கிய முதல் படமான 'நாடோடி மன்னன்', தமிழ் நாட்டில் பல திரையரங்குகளில் ஓடி வெற்றி பெற்றுக் கொடுத்தது. இது தமிழ் ரசிகர்களின் மனதில் ஓர் அங்கீகாரத்தைப் பெற்றது. ஓர் இயக்குநராக தனது முதல் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அவர் இரண்டு படங்களை இயக்கி நடிக்கவும் செய்தார். அவை 'உலகம் சுற்றும் வாலிபன்' மற்றும் 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' என்பனவாகும். 1971 இல் வெளியான 'ரிக்ஷாக்காரன்' படத்தில், ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்ததால், எம்.ஜி.ஆருக்கு, சிறந்த நடிகருக்கான 'தேசிய விருது' கிடைத்தது.

1960 இல், எம்.ஜி.ஆர். இந்தியாவின் 'பத்மஸ்ரீ விருதுக்காகத்' தெரிவு செய்யப்பட்டார். ஆனால், அவர் அரசின் பற்றற்ற நடத்தையின் காரணமாக அதை ஏற்க மறுத்துவிட்டார். ஏனென்றால், விருதில் பாரம்பரிய ஹிந்தி வார்த்தைகளுக்கு பதிலாக தனது தாய்மொழியான தமிழில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார்.

'ரிக்ஷாக்காரன்' படத்தில் தனது நடிப்புக்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதை 1972 இல், எம்.ஜி.ஆர். பெற்றார்.

சென்னை மற்றும் உலக பல்கலைக்கழகமும் அவருக்கு 'முனைவர் பட்டம்' வழங்கி சிறப்பித்தன.

தமிழ் நாட்டின் சமுதாயத்தின் நன்மைக்காக அவருடைய பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக அவர் இறந்த பிறகு 1988 இல் 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். மூன்று முறை திருமணம் செய்து கொண்டார். அவரது முதல் இரண்டு மனைவிகள் நோயின் காரணமாக இறந்துவிட்டனர். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு, அவரது மூன்றாவது மனைவியான ஜானகி ராமச்சந்திரன், அ.இ.அ.தி.மு.கவின் பொறுப்பை ஏற்றார்.

எம்.ஜி.ஆருக்கு சிறுநீரகப் பிரச்சினைகள் இருந்தன. சிறுநீரகக் கோளாறு காரணமாக 1984 ஆம் ஆண்டு ஒக்ரோபரில், அமெரிக்காவின் புரூக்ளின் நகரில் உள்ள டவுன்ஸ்டேட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதே ஆண்டு, சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொண்டார். இறுதியாக 1987 இல் நோய்வாய்ப்பட்டார். 1987 டிசெம்பர் 24 ஆம் திகதி இயற்கை எய்தினார்.

★

---

# எமது மக்களின் நியாயமான நீதிக்காக நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்!

## தமிழ் மக்கள் பேரவையில் இணைத் தலைவர் லக்ஸ்மன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.23

நாம் அனைவரும், மனச்சாட்சியின்படி ஒன்றுபட்டு எமது மக்களின் நியாயமான நீதிக்காக உழைக்க வேண்டும். இதற்கு எமது மக்கள், மக்கள் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகள், ஊடகங்கள் என அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

- இவ்வாறு தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் இதய சிகிச்சை நிபுணர் பூ.லக்ஸ்மன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் முதலாம் ஆண்டு பூர்த்தி நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் இணைத் தலைவர் இதய சிகிச்சை நிபுணர் லக்ஸ்மன் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

ஆயுத மோதல்களின் முடிவுக்குப் பின்னரான சூழ் நிலையில், எம் மத்தியில் நிலவிவந்த மற்றும் திட்டமிட்டே ஏற்படுத்தப்பட்ட குழப்பகரமான சூழ்நிலைகள், தேர்தல் அரசியலுக்கு அப்பாலான கொள்கைவழி ஒன்றிணைவு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தி நின்றது.

அதற்கான முன்முயற்சிகள் ஏறத்தாழ நான்கு வருடங்களாக பலமட்டங்களில் நடைபெற்று வந்து, கடந்த வருட இறுதியில் தமிழ் மக்கள் பேரவை செயற்பட ஆரம்பித்தது.

இந்த ஒன்றிணைவுக்காக உழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

எதிர்காலம் பற்றிய கேள்விக் குறியுடன் நின்றிருந்த மக்களுக்கு தமிழ் மக்கள் பேரவையின் தொடக்கமும் செயற்பாடுகளும் மிகுந்த நம்பிக்கையை கொடுத்திருக்கின்றன என்பது மக்களுடன் நிற்கும் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு வெளிப்படையான விடயமாகும்.

அதே நேரம் மக்களின் இந்த எதிர்ப்பார்ப்பும் நம்பிக்கையும் எமது கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

மக்களின் நம்பிக்கைக்கு ஏற்றபடி, எமது இனத்தின் அபிலாஷைகளை முன்னிறுத்தி, எமக்காக இழைக்கப்பட்ட அர்ப்பணிப்புகளை மனதில் கொண்டு, நாம் தொடர்ந்தும் மக்களுக்காக உழைப்போம் என்று இந்தத் தருணத்தில் உறுதிகொள்ளுகிறோம்.

இந்தத் தருணத்தில் கடந்த ஒருவருடத்தில் நாம் செய்தவற்றையும் மீள நினைவுபடுத்தல் அவசியமாகின்றது.

எமது அனைத்து செயற்பாடுகளும் எந்த ஒரு தனி மனிதருக்கோ அல்லது தனி அமைப்புகளுக்கோ சொந்தமானதல்ல. எவரும் அப்படி உரிமை கோருவதும் இல்லை. இவை அனைத்தும், எமது தேசத்தின் பெயரிலான அனைவரினதும் கூட்டு முயற்சியே. உண்மையில் இப்படியாக எம் மத்தியில் தனி நபர்களையோ, அமைப்புகளையோ முன்னிலைப்படுத்தாத, கோட்பாடுகளை மட்டும் முன்னிலைப் படுத்தும் தேச நலன் சார்ந்த ஒரு கூட்டு மனோ நிலையை உருவாக்கியதுதான் தமிழ் மக்கள் பேரவை ஆற்றிய மிகக் காத்திரமான பணி என நான் நம்புகிறேன்.

பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தினுள், இலங்கை இனப் பிரச்சினையின் தீர்வு குறித்தான தமிழர் தரப்பு தீர்வு வரைபு ஒன்று, துறைசார் நிபுணர்களால் உருவாக்கப்பட்டு, மக்கள் கலந்துரையாடல் மூலம் செழுமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டது. இப்படியாக மக்கள் பங்களிப்புடன் கூடிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டது எமது வரலாற்றில் முதன்முறையாக நடந்த ஒரு நிகழ்வாகப் பதியப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எனும் பெயரில் எமது புதிய அரசமைப்பு ஒன்று முன்வைக்கப்பட இருக்கும் மிகவும் தீர்க்கமான சூழ் நிலையில், எமது தீர்வுவரைபானது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

பேரவை செய்ய வேண்டிய செயற்பாடுகள் ஏராளம் இருப்பினும், இன்றைய அரசியல் சூழ்நிலையின் முக்கியத்துவம் கருதி, சில வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என நினைக்கிறேன்.

குறிப்பாக புதிய அரசியலமைப்பு குறித்தும், எமது மக்களின் அபிலாசைகளின் அரசியல் விஞ்ஞான ரீதியான நியாயப்பாடுகள் மற்றும் சாத்தியப்பாடுகள் குறித்தும், எம் தாயகப் பகுதியெங்கும் கலந்துரையாடல்கள் நடத்தப்படவேண்டும்.

வெறுமனே அரசியல் விஞ்ஞான சொற்களை மாற்றுவதன் மூலமும் வார்த்தை விளையாட்டுகள் மூலமும் மக்கள் பிழையான திசையில் வழிநடத்தப்படாதிருக்க, மக்களுக்கான அரசியல் கலந்துரையாடல்கள் பரவலாக இடம்பெற வேண்டும்.

பேரவையின் தீர்வுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மீண்டும் மக்கள் மத்தியில் பரவலாக ஆரம்பிக்கப்படவேண்டும்.

தாயகத்தின் மக்கள் அமைப்புகள் தொழிற்சங்கங்களை எமது மக்களின் நலன் எனும் பொது நோக்கில் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இலங்கையின் அனைத்து சமூகங்களுடன் புரிந்துணர்வின் அடிப்படையில் எமது பிரச்சினைகளினதும் தீர்வுகளினதும் நியாயப்பாடுகள் குறித்த கலந்துரையாடல்கள் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.


நாம் அனைவரும், மனச்சாட்சியின்படி ஒன்றுபட்டு எமது மக்களின் நீதிக்காக ஒன்று சேர்ந்து உழைக்க முன்வருமாறு எமது மக்கள், மக்கள் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகள் , ஊடகங்கள் என அனைவரையும் தமிழ் மக்கள் பேரவை உரிமையுடன் அழைக்கிறது.- என்றார்.

(ஐ)




### ட்ரம்ப் 'ஒரே சீனா கொள்கை'யில் பேரம்பேச முடியுமா?


அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் சீனாவுடனான அவரது போர் வசனங்களை இன்னும் உரத்த குரலில் வெளிப்படுத்தினார். 40 ஆண்டுகளுக்கும் அதிக காலமாக அவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இராஜாங்க உறவுகளுக்கு அடித்தளமாக இருந்துள்ள ''ஒரே சீனா'' கொள்கைக்கு அவர் கட்டுப்பட்டிருப்பதாக உணரவில்லையென அறிவித்தார். அவர் கருத்துக்கள், 1979க்குப் பின்னர் அமெரிக்க மற்றும் தாய்வானிய தலைவர்களுக்கு இடையிலான முதல் நேரடி தொடர்பாக, டிசெம்பர் 2 அன்று தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் உடனான தொலைபேசி கலந்துரையாடலைத் தொடர்ந்து வந்துள்ளது.





சீன அரசாங்கம் ஏனைய பிரச்சினைகளில் விட்டுக்கொடுத்தால் மட்டுமே, சீனா முழுமைக்கும் ஒரே சட்டபூர்வ அரசாங்கமாக பீஜிங்கை மட்டுமே அங்கீகரிக்கும் ஒரே சீனா கொள்கையை அவர் அனுசரிக்க முடியும் என்பதை Fox News இல் பேசுகையில் ட்ரம்ப் தெளிவுபடுத்தினார். வர்த்தகம் உட்பட ஏனைய விடயங்களில் செய்ய வேண்டியதைக் குறித்து சீனாவுடன் நாம் ஒரு உடன்பாட்டிற்கு வந்தால் ஒழிய நாம் ஏன் ஒரே சீனா கொள்கையைக் கொண்டிருக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை, என்றவர் அறிவித்தார்.




### சீனாவால் நாம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்,- ட்ரம்ப்




சீனா மீதான உறுதியான கோரிக்கைகளில் என்ன இருக்கின்றன என்பதை அவர் வலியுறுத்தினார். பாருங்கள், நான் கூறுவது என்னவென்றால் நாணய மதிப்பிறக்கத்தால்; நாம் அவர்கள் மீது வரி விதிக்காத போதும் எல்லைகளில் நம் மீதான அதிக வரி விதிப்பால்; தென் சீனக் கடலின் நடுவில் ஒரு பாரிய படையரணைக் கட்டமைத்து வருவதால், இதை அவர்கள் செய்திருக்கக் கூடாது; வெளிப்படையாகக் கூறுவதானால், வட கொரியா விவகாரத்தில் நமக்கு உதவாமல் இருப்பதற்காக என சீனாவால் நாம் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம், என்று அவர் தெரிவித்தார்.




பீஜிங் பிரதான பொருளாதார மற்றும் வணிக விட்டுக்கொடுப்புகளை வழங்காவிடில் மற்றும் தென் சீனக் கடலில் அதன் நில மீள்உரிமை கோரலை முடிவுக்குக் கொண்டு வராவிடில் மற்றும் அதன் கூட்டாளி வட கொரியா மீது அதை முடக்கும் விதத்தில் பொருளாதார தடைகளைத் திணிக்காவிடில், அமெரிக்க-சீன இராஜாங்க உறவுகளின் அடித்தளத்தை கிழித்தெறிவதென்ற ட்ரம்பின் கொந்தளிப்பு ஒரு மூர்க்கமான அச்சுறுத்தலாகும். சீனாவை ஒரு செலாவணி மோசடியாளராக முத்திரை குத்தியது மற்றும் சீன பண்டங்கள் மீது 45 சதவீத வரி விதிப்பது உட்பட தேர்தல் பிரசாரத்தின்போது அவர் ஏற்கனவே வர்த்தக போர் நடவடிக்கைகளை அச்சுறுத்தி உள்ளார்.

### ரிச்சார்ட் நிக்சன் மற்றும் மாவோ சே துங் ஆல் முத்திரையிடப்பட்ட சீனாவுடனானஅமெரிக்கநல்லிணக்கம்





Nixon Visits China. In 1972, Richard Nixon visited communist China and Mao ZeDong. This effectively opened up diplomatic relations between the U. S. and China. In addition economic and cultural exchanges opened up as well.

1972 இல் ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் மற்றும் மாவோ சே துங் ஆல் முத்திரையிடப்பட்ட சீனவுடனான அமெரிக்க நல்லிணக்கம், ஷாங்காய் மாநாட்டில் ஒரே சீனா கோட்பாட்டை உள்ளடக்கி இருந்தது. 1979 இல், இரண்டாம் மாநாடு இராஜாங்க உறவுகளை ஸ்தாபிப்பதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தியது. அமெரிக்கா தாய்வான் உடனான அதன் இராஜாங்க அங்கீகரிப்பை நிறுத்திக் கொண்டு, அத்தீவிலிருந்து துருப்புகளைத் திரும்பப் பெற்ற அதேவேளையில், தாய்வானுடனான உறவுகள் சட்டம் என்பதன் கீழ் சீனாவுடன் அதன் எந்தவிதமான பலவந்தமான மறுஐக்கியத்தையும் எதிர்த்ததுடன், தாய்வானுக்கு தொடர்ந்து ஆயுதங்களையும் விற்பனை செய்து வந்தது.

### ஆசியாவிலும் மற்றும் உலகெங்கிலும் அதிகரித்துவரும் ஸ்திரமற்ற தன்மை:

''வேறொரு நாடு நான் பேசக் கூடாதென ஏன் கூறுகிறது?''

அமெரிக்க-சீன உறவுகள் மீது ஒரு கேள்விக்குறி இட்டுள்ளதன் மூலம், ட்ரம்ப் ஆசியாவிலும் மற்றும் உலகெங்கிலும் அதிகரித்துவரும் ஸ்திரமற்ற தன்மையை பொறுப்பற்ற விதத்தில் இன்னும் அதிகரிக்கிறார். பல நாடுகளின் சீனாவுடனான இராஜாங்க உறவுகளுக்கு இந்த ஒரே சீனா கொள்கையே அடித்தளமாகும். தாய்வான் ஜனாதிபதி உடனான ட்ரம்பின் தொலைபேசி உரையாடலால் எடுத்துக்காட்டப்பட்டதைப் போல, தாய்வான் உடனான அமெரிக்க உறவுகளை எந்தவிதத்திலும் அதிகரிப்பதானது, சீனாவுடன் துரிதமாக ஒரு மோதலுக்கு இட்டுச் செல்லும். உத்தியோகபூர்வ சுதந்திரம் பிரகடனம் செய்வதற்காக ஒரு பிரிந்து செல்ல விரும்பும் பிரதேசமாக தாய்வானை சீனா கருதுகின்ற நிலையில், தாய்வானின் எந்தவொரு முயற்சிக்கும் அது இராணுவ ரீதியில் விடையிறுக்கும் என்பதை பீஜிங் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சாய் உடனான அவரது தொலைபேசி உரையாடல் பல வாரங்களுக்கு முன்னரே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது என்பதை Fox News இல் கூறிய அவரது கருத்துக்களில் மறுத்துரைத்த ட்ரம்ப், அது அவரது தேர்தல் வெற்றி குறித்து அவரை வாழ்த்துவதற்கான ''ஒரு மிகச் சிறிய உரையாடல்'' என்று தெரிவித்தார். வேறொரு நாடு நான் பேசக் கூடாதென ஏன் கூறுகிறது? என்று அவர் கூறினார். நேர்மையாக கூறுவதானால், அதை ஏற்காமல் இருந்திருந்தால் உண்மையில் அது மிகவும் அவமதிப்பதாக இருந்திருக்கும், என்றார்.

### தாய்வான் அரசாங்கத்திற்கான இடைத்தரகராக செயற்பட்டு வந்த குடியரசு கட்சியின் முன்னாள் செனட்டர் பாப் டோல்

ட்ரம்பின் வாதங்கள் முற்றிலும் அர்த்தமற்றவை. நியூ யோர்க் டைம்ஸ் செய்தியின்படி, தாய்வான் அரசாங்கத்துக்கான இடைத்தரகராக செயற்பட்டு வந்த குடியரசுக் கட்சியின் முன்னாள் செனட்டர் பாப் டோல், தாய்வானிய அதிகாரிகள் மற்றும் ட்ரம்ப் பணியாளர்களுக்கு இடையே தொடர்புகளை ஏற்படுத்த பல மாதங்களாக திரைக்குப் பின்னால் வேலை செய்திருந்தார். தாய்வானுக்கான அமெரிக்க பிரதிநிதிகள் குழு ஒன்றுக்கு ட்ரம்பின் பண உதவிகள் மற்றும் ஜூலையில் கிளீவ்லாந்தில் நடந்த குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு ஒரு தாய்வானிய பிரதிநிதிகள் குழுவை ஏற்பாடு செய்தமை ஆகியவையும் இதில் உள்ளடங்கும்.

அனைத்திற்கும் மேலாக, அவரது தலைமைப் பணியாளர்ரியன்ஸ்பிரைபஸ் போன்ற தாய்வானுடன் தொடர்பு வைத்துள்ள பல பிரமுகர்கள் ட்ரம்பின் பதவி நியமன தேர்வுக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். பதவி நியமன தேர்வுக் குழுவின் ஓர் அங்கத்தவரான எட்வார்ட் பியூல்னர் அந்த தொலைபேசி உரையாடலை ஏற்படுத்தியதில் முக்கிய பாத்திரம் வகித்ததாக சாய் உடனான ட்ரம்பின் உரையாடலுக்குப் பின்னர் தாய்வானின் உத்தியோகபூர்வ மத்திய செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. துல்லியமாக அது எவ்விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் சரி, அந்த தொலைபேசி உரையாடல் முன்கூட்டியே, பல மாதங்கள் இல்லையென்றாலும், பல வாரங்களாக ஒழுங்கு செய்யப்பட்டு, வெறும் வாழ்த்துக்கள் என்பதற்கும் அதிகமான விடயங்கள் அதில் சம்பந்தப்பட்டிருந்தன.

### தாய்வானுக்கு அமெரிக்க ஆயுத தளவாடங்களை காலவரையறையற்று விற்கலாம்.



மிக முக்கியமாக ட்ரம்பை வேட்பாளராக்கிய குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு, அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகனால் தாய்வானுக்கு வழங்கப்பட்ட ஆறு உத்தரவாதங்கள் என்று அறியப்படுவதை உள்ளடக்கியதன் மூலம் அக்கட்சியின் உத்தியோகபூர்வ செயற் திட்டத்தையும் மாற்றி அமைத்திருந்தது. தாய்வானுக்கு அமெரிக்க ஆயுத தளவாடங்களை காலவரையறையற்று விற்கலாம் என்பதும் அதில் உள்ளடங்கும். (கேள்வி தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





# தமிழ்த் தேசிய எழுச்சி

04

## தமிழ்த் தேசிய இயக்கமும் சமஷ்டிக் கட்சியும்

சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுப் பெறுபேறாக பிறப்பெடுத்த தமிழ்த் தேசியமானது ஒருபுறம் கருத்தியலாகவும் மறுபுறம் திண்ணியமான அரசியல் இயக்கமாகவும் இரு பரிமாணங்களைக் கொண்டதாக விளங்கிற்று. ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கூட்டுணர்வாகவும் அவர்களது தேசிய விழிப்புணர்வின் எழுச்சிக் கோலமாகவும் பிரவாகமெடுத்த தமிழ்த் தேசியமானது தன்னகத்தே முற்போக்கான புரட்சிகரமான இயல்புகளையும் கொண்டிருந்தது. ஒடுக்கப்பட்ட தமிழினமானது சுதந்திரம், தர்மம், கௌரவம் போன்ற ஆழமான அரசியல் அபிலாஷைகளை வேண்டி நின்றதால் அது முற்போக்குத் தன்மை வாய்ந்தது எனலாம். தமிழ்த் தேசியமானது தமிழ் மக்களது சகல வகுப்பாரையும் ஒன்றுதிரளச் செய்து, தேச விடுதலை என்ற ஒரே இலட்சியத்தில் ஒருமுகப்படுத்தியதால் அது புரட்சிகரத் தன்மை வாய்ந்தது எனக் கருதலாம்.

தமிழர்களின் அரசியல் வரலாற்றுப் படிமுறை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில், தமிழ்த் தேசிய உணர்வானது சமஷ்டிக் கட்சி வாயிலாகவே நிறுவன வடிவம் எடுத்தது. (சமஷ்டிக் கட்சியானது தமிழில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்று அழைக்கப்பட்டது. காலம் சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 1949, டிசெம்பரில் அதை நிறுவினார்). பொதுத்தேர்தல் 1956 இல் நடைபெற்றபோது, தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் சமஷ்டிக் கட்சி பெருவெற்றி பெற்றது. தமிழ்த் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லவல்ல, பலம் மிக்க அரசியல் சக்தியாகவும் அது முகிழ்த்தது. தமிழினத்தின் அபிலாஷையைப் பிரதிபலிக்கும் தேசிய இயக்கமாக வடிவெடுத்த இக்கட்சி, முற்போக்குப் பண்புகளையும் மக்களாட்சிப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. அத்துடன், வெவ்வேறு வர்க்கங்களையும் சாதிகளையும் ஒரு மாபெரும் மக்கள் சக்தியாக ஒன்றிணைத்து, வழிநடத்தக் கூடியதாகவும் அது வடிவெடுத்தது.

இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களிடையே ஒரு பலமான அடித்தளத்தை அமைக்கத் தவறிவிட்டது. தேசிய ஒடுக்குமுறையின் குரூர நிலைமைகளைப் புரிந்துகொண்டு,அவற்றைத் தங்கள் அடிநாதமாகக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளும் அரசியல் தூரநோக்கு அவர்களிடம் இல்லாது போனதே அதன் தோல்விக்குக் காரணம் எனலாம். ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசியப் போராட்டத்துக்கு மேலானதாக வர்க்கப் போராட்டத்துக்கு அவர்கள் முன்னுரிமை கொடுத்தார்கள். தமிழ் மக்களின் தேசப் பற்றுணர்வைத் தவறாக எடைபோட்டு, அதை வெறும் இனவாதத் தேசியத்தின் பிற்போக்கு வடிவமாக முலாம் பூசினார்கள். அந்தப் போராட்டத்தின் உட்கிடக்கையாக அமைந்த முற்போக்குப் பண்புகளையும் புரட்சிகரத் தன்மையையும் அவர்களால் இனங்காண முடியவில்லை. இரண்டு இனங்களுக்கிடையே முக்கிய முரண்பாடாகத் தேசிய ஒடுக்குமுறை நிலவும் போது, தொழிலாள வர்க்க ஒன்றுபடுதல் நடைமுறையில் சாத்தியமற்றது என்ற அரசியல் உண்மையை உணராது அனைத்துலகத் தொழிலாள வர்க்க ஒருமைப்பாடு பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசியப் போராட்டத்தின் புரட்சிகர உட்கிடைகளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இதற்கு மாறாக, சமஷ்டிக் கட்சி மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றி கண்டதுக்குக் காரணம், தமிழ் இனத்தின் மீது சிங்கள அரசு தொடுத்த ஒடுக்குமுறைத் தாக்குதலின் உக்கிரத்தை அந்தக் கட்சி உணர்ந்து கொண்டதேயாகும்.

> இனவாத 'சிங்களம் மட்டும்' சட்டத்தை நடைமுறைப்படுத்த பண்டாரநாயக்க அரசாங்கம் தீர்மானித்த போது, சமஷ்டிக் கட்சிக்கு இந்த நடவடிக்கை ஒரு முக்கிய சவாலாக அமைந்தது.



பன்முக ஒடுக்குமுறையின் வேகத்தில், தமிழ்த் தேசியத்தின் வடிவமும் அடையாளமும் பாதிக்கப்பட்டு விடும் என்பதை அந்தத் தலைமை புரிந்து கொண்டது. இந்த ஆபத்தின் அச்சுறுத்தலை அவர்கள் மக்களிடம் தெரிவித்தார்கள். பல்வேறு மட்டங்களில் உள்ள தமிழ் மக்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பினார்கள். தனித்தனி உதிரிகளாக வேறுபட்டு முரண்பட்டு நின்ற வர்க்கத்தினரையும் சாதியினரையும் அணிதிரட்டி, தொடர்ச்சியான வெகுசனப் போராட்டத்தில் களமிறங்கிய சமஷ்டிக் கட்சி ஒரு வலுவான தேசிய இயக்கமாக வடிவெடுத்தது.

இனவாத 'சிங்களம் மட்டும்' சட்டத்தை நடைமுறைப்படுத்த பண்டாரநாயக்க அரசாங்கம் தீர்மானித்தபோது, சமஷ்டிக் கட்சிக்கு இந்த நடவடிக்கை ஒரு முக்கிய சவாலாக அமைந்தது. பொதுமக்களைக் கவரக் கூடிய சத்தியாக்கிரகம் என்ற எதிர்ப்பு நடவடிக்கையை அது கைக் கொண்டது.( வன்செயலற்ற, அமைதியான, அறவயப்பட்ட காந்திய வழி நிற்பதுமான குந்துமறியல் போராட்டங்களில் அது ஈடுபட்டது). சிங்களம் மட்டும் சட்டத்தை விவாதிப்பதற்காக 1956 ஜூன் 5 காலை நாடாளுமன்றம் கூடியபோது, சமஷ்டிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கொழும்பு நாடாளுமன்றத்துக்கு எதிரே, காலிமுகத்திடலில் நூற்றுக்கணக்கில் கூடி, சத்தியாக்கிரகம் புரிந்தார்கள். ஒரு சில மணி நேரத்தில், அங்கு குழுமிய சிங்களக் காடையர், அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கல்லால் அடித்தார்கள். நேரடியாகத் தாக்கினார்கள். நிலைமை மோசமாகி, ஆபத்துக் கட்டத்தை எட்டியதும் சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் தங்களது மறுப்புப் போராட்டத்தைக் கைவிட்டார்கள். சத்தியாக்கிரகிகளைத் துன்புறுத்தித் தாக்கிய கலகக்காரர், இரத்த வெறி கொண்ட வன்முறையில் இறங்கி, தலைநகரான கொழும்பில் தமிழ் மக்களைத் தாக்கி, அவர்களது சொத்துக்களைச் சூறையாடினார்கள். கலகம் நாட்டின் வேறு பாகங்களுக்குப் பரவ, கொலை, கொள்ளை, தீ வைப்பு, பாலியல் வன்தாக்குதல் ஆகிய வன்செயல்கள் பெருகின. அம்பாறையில் நூற்றுக்கும் அதிகமான தமிழர் படுகொலை செய்யப்பட்டார்கள். இனக்கலவரம் பரவுவதையும், தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதையும் பொருட்படுத்தாது சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்மொழி தனது உத்தியோகத் தகைமையைப் பறிகொடுத்தது.

சிங்களம் மட்டும்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து, சமஷ்டிக் கட்சி, தமிழ் இனம் தன்னாட்சியுடன் இயங்கக் கூடிய சமஷ்டி ஆட்சி வடிவம் கோரி, வெகுசனப் போராட்டங்களைப் பரவலாக ஏற்பாடு செய்தது. பொதுத்தேர்தல் 1956 இல் நடந்தபோது, அதில் சமஷ்டிக் கட்சிக்கு ஏகோபித்த வெற்றி கிடைத்தது. தமிழ் மக்களின் தன்னாட்சி சமஷ்டி வடிவத்துக்கான தெளிவான வாக்களிப்பாக அது காணப்பட்டது. தனது கோரிக்கைகளைச் சாதிக்கும் நோக்கத்தோடு சமஷ்டிக் கட்சி தனது சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தத் தீர்மானித்தது. தமிழினத்தின் அரசியல் தன்னாட்சிக்கான கோரிக்கையும், தமிழ்த் தேசிய எழுச்சி உணர்வலையும் சிங்கள ஆட்சி பீடத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கின. வேகம் பெறும் வெகுசனப் போராட்டத்துக்கு அரண் கட்ட வேண்டும் என்ற தவிப்போடு தமிழருக்குச் சலுகைகளை வழங்க வேண்டும் என்ற தவிப்போடு தமிழருக்குச் சலுகைகளை வழங்க பண்டாரநாயக்க இணங்கினார். அவருக்கும் சமஷ்டிக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தாகியது. பிரதேச மன்றங்கள் ஊடாக ஓரளவு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவும் உறுதியளிக்கப்பட்டது. உடன்படிக்கை, சிங்கள இனவாத சக்திகள் மத்தியில் சந்தேகத்துக்கும் எதிர்ப்புக்கும் தூபமிட்டது. இந்த நிலைமையைத் தமக்கு வாய்ப்பாக அந்தத் தருணத்தில் பயன்படுத்தியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆவர். உடன்படிக்கை கைவிடப்பட்ட வேண்டும் என்ற எதிர்ப்புக் கோரிக்கையை முன்வைத்து, பௌத்த பிக்குகளின் ஆரவுடன் கண்டியை நோக்கிக் கால்நடை ஊர்வலம் ஒன்றுக்கு அவர் ஏற்பாடு செய்தார். இதனால் தூண்டப்பெற்ற சிங்களப் பேரினவாத அலை, அரச அமைச்சரவை உறுப்பினர் சிலருக்கும் உருவேற்ற, அவர்களும் உடன்படிக்கைக்கு எதிரான ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். இவர்கள் தலைமையில் பெருந்திரளான பிக்குகளும் அவர்களுடைய இனவெறி ஆதரவாளர்களும் பண்டாரநாயக்கவின் உத்தியோக இல்லத்தை நோக்கி ஒப்பந்தப் பிரதி தாங்கிய சவப்பெட்டி ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். தலைமை அமைச்சரது இல்லத்தின் முன் தேங்கிய இந்த ஊர்வலம் சவப்பெட்டித் தகனத்தை உணர்ச்சி ஆரவாரத்துடன் நிறைவேற்றியது. இந்த இனவாதப் பித்தலாட்டத்துக்கு அடிபணிந்த பண்டாரநாயக்க, ஆர்ப்பாட்டக்காரர் முன்பாகவே ஒப்பந்தத்தைக் கைவிடுவதாகப் பகிரங்கப் பிரகடனம் செய்தார்.

சிங்கள அரசியல் தலைமை புரிந்த இந்த மாபெரும் நம்பிக்கைத் துரோகமானது இன ஒருமைப்பாட்டுக்கான நம்பிக்கைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்ததுடன் இரு தேசங்கள் மத்தியிலான உறவிலும் பகைமையைத் தீவிரப்படுத்தியது. இந்தப் பகைமை உணர்வு படிப்படியாகக் கூர்மையடைந்து 1958 இல் தமிழர்களுக்கு எதிரான இனத்துவேசக் கலவரமாக வெடித்தது. சிங்கள தேசம் முழுவதும் தலைவிரித்தாடிய இனக் கலவரக் கொடூரம் இலங்கை வரலாற்றின் பக்கங்களை இரத்தத்தால் கறைபடுத்தியது. அப்பாவிகளான தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமையும் குரூரமும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. பல நூற்றுக்கணக்கானோர் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள். கர்ப்பிணித் தாய்மார் பாலியல் வன்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ்ப் பாலர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். பாணந்துறையில் இந்துக் குருக்கள் ஒருவர் உயிரோடு எரிக்கப்பட்டார். மகா ஓயா என்ற ஊரிலே, கிணறு ஒன்றில் இருந்து காயம்பட்ட வடுக்களோடு சடலங்கள் பல மீட்கப்பட்டன. களுத்துறையில், கிணற்றுக்குள் இறங்கிப் பதுங்க முயன்ற ஒரு தமிழ்க் குடும்பம் மீது இனவெறிக் காடையர்கள் பெற்றோல் ஊற்றி உயிருக்காகக் கெஞ்சிய அவர்கள் மீது நெருப்பு வைத்தார்கள். தீச் சுவாலைகளால் உயிரோடு பொசுங்கி அவர்கள் துடி துடித்துக் கதறி ஓலமிட்டபோது, இனவெறிக் காடையர் கெக்கொலி கொட்டி, நடனமாடி மகிழ்ந்தார்கள். ஆயிரமாயிரம் பேர் தங்கள் வீடு வாசல்களை இழந்தார்கள். பல கோடி பெறுமதி வாய்ந்த தமிழ்ச் சொத்துக்கள் ஒன்றில் சூறையாடப்பட்டன. அல்லது தீயிட்டுச் சாம்பலாக்கப்பட்டன. பயங்கர இனவெளி நாடு முழுவதும் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும்போது, இந்தப் பயங்கர வெறியாட்டத்தை பண்டாரநாயக்கா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். தமிழ் மக்கள், 'பட்டுப் பழகட்டும்' என்று தாம் விட்டுக் கொண்டிருந்ததாக, அவரை மேற்கோள் காட்டி பின்னர் எடுத்தாளப்பட்டது. வேண்டுமென்றே இருபத்து நான்கு மணி நேரம். தாமதித்த பின்னர், அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டபோது, பத்தாயிரம் தமிழ் மக்கள் அகதிகள் என்ற நிலைக்கு ஆளானார்கள். இவர்களில் பலர் , அரச ஊழியர். பலர் உயர் தொழில் வல்லுநர்கள். மேலும் பலர் கொழும்பு வர்த்தகர்கள். பாதுகாப்புக் கருதி இவர்கள் வடக்குக்கும் கிழக்குக்கும் கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டார்கள்.

(தொடரும்...)

# புத்தளம் தள வைத்தியசாலையில் சம்பள நிலுவை கோரி ஆர்ப்பாட்டம்



புத்தளம், டிசெ.23

சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்கக் கோரி புத்தளம் தள வைத்தியசாலையின் சகல பிரிவுகளையும் சேர்ந்த வைத்தியத்துறை சார்ந்தவர்கள், நேற்றுமுன்தினம் நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு மாத காலமாகத் தமக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக நேர கொடுப்பனவுகள், விடுமுறை தினங்களின் சேவைக் கொடுப்பனவுகள் என்பவற்றை உடனடியாக வழங்கக் கோரியும், சம்பள அதிகரிப்பைக் கோரியும், புத்தளம் தள வைத்தியசாலைக்கு முன்பாக பதாகைகளை ஏந்தியவாறு, அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் தள வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் உள்ளிட்ட சகல பிரிவுகளையும் சேர்ந்த அதிகாரிகள் பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (எ)

# பால் உற்பத்தியை அதிகரிக்க 10 ஆயிரம் பசுக்கள் இறக்குமதி

## அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பியதாஸ எம்.பி.தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ.23

இலங்கையில் பால் உற்பத்தி, சுயதொழில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கில் வெளிநாட்டிலிருந்து 10 ஆயிரம் பசுக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாஸ தெரிவித்துள்ளார்.

ஹற்றன், காமினிபுரவில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதித் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''கிராம அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் என்ற அடிப்படையில், தோட்டப்பகுதிகள், கிராமப்பகுதிகள் என்பவற்றில் பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் தலா பத்துப் பேரைத் தெரிவுசெய்து, அவர்களை சுயதொழிலில் ஊக்குவிக்கவே, பசுக்கள் வழங்கப்படவுள்ளன.

பசுக்களைப் பெற்றுக் கொண்டவர்கள், சரியான முறையில் பால் உற்பத்தியில் ஈடுபட்டால், அவர்கள் வசிக்கும் பகுதிகளிலே பால் பண்ணைகளும் விற்பனை நிலையங்களும் அமைத்துக் கொடுக்கப்படும்.

இன்று நாட்டில், தொழில் வாய்ப்புப் பிரச்சினை அதிகளவில் உள்ளது. இதனை நிவர்த்தி செய்ய, பெரிய வேலைத்திட்டங்களை நல்லாட்சி அரசு முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது. கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், தொழில் வாய்ப்புகளுக்காக அலைந்து திரிகின்றார்கள். இவ்வாறானவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தோட்டப் பகுதி, கிராமப்பகுதி என்பனவற்றில், தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கூடாக மரவேலைகள், கட்டட வேலைகள் போன்ற தொழில்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இந்தத் திட்டம் மாவட்ட, பிரதேச வாரியாக முன்னெடுக்கப்படவுள்ளது. மேற்படி தொழில்களில் பயிற்சி பெற்றவர்கள், அம்பரந்தோட்டை, கொழும்பு, கண்டி போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டட மற்றும் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர். அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் பெற்றுக்கொடுக்கப்படும். ''- என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 23.12.2016

சுபநேரம் : காலை : 9.15 – 10.15
மாலை : 4.45 – 5.45
ராகு காலம் : 10.30 – 12.00
குளிகன் : 7.30 – 9.00
எமகண்டம் : 3.00 – 4.30

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** பணிவு - வீண் கோபத்தைக் குறைத்து பணிவுடன் செயற்பட்டால் நலம் ஏற்படும்.

**ரிஷபம்:** பாசம் - இனிமையானவர்கள் அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** தனம் - திடீர் பொருள் சேர்க்கை ஏற்படும் நன்னாள்.

**கடகம்:** அசதி - உழைப்பால் ஏற்பட்ட களைப்பு ஏற்படும்.

**சிம்மம்:** தெளிவு - மனதில் உள்ள குழப்பங்கள் நீங்கித் தெளிவு பெறும் நன்னாள்.

**கன்னி:** சாந்தம் - மனக் குழப்பங்கள் குறைந்து வாழ்வில் சாந்தம் காண்பீர்கள்.

**துலாம்:** மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்றுக் குறைவாக இருக்கும்.

**விருச்சிகம்:** சுகம் - இன்று மனதில் மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.

**தனுசு:** செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும்.

**மகரம்:** நலம் - இன்று மன மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காண்பீர்கள்.

**கும்பம்:** பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடுவீர்கள்.

**மீனம்:** விவேகம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் நிதானத்தைக் கடைப்பிடித்தால் அறிவு மிளிர்ந்து செய்யும் செயல்களில் சிறப்புகள் கூடும் நாள்.
சந்திராஷ்டமம் : உத்திரட்டாதி, ரேவதி

# வறட்சியான காலநிலையிலும் நன்னீர் மீன்பிடியில் வளர்ச்சி

## நீர்வள அபிவிருத்தி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.23

வறட்சியுடன் கூடிய காலநிலை காணப்பட்டாலும் இந்த வருடம் நன்னீர் மீன்பிடித்துறை வளர்ச்சி கண்டிருப்பதாக கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 4.1சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாண்டில் நன்னீர் மீன்பிடித் துறையில் கடல் துறைசார் மீன்பிடியும் இரண்டு சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நன்னீர் மீன்பிடித்துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்களால் அடுத்த வருடம் 8 சதவீத வளர்ச்சியை மீன்பிடித் துறை அடையும் என்று நம்



பிக்கை தெரிவித்தார்.

மேலும் கடந்த ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் மொத்த கடற்றொழில்சார் உற்பத்தி 4 லட்சத்து 32 ஆயிரம் மெற்றிக் தொன்களைத் தாண்டியிருந்தது. இதில் நன்னீர் மீன்பிடித்துறையின் பங்களிப்பு 14 சதவீதமாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# வீட்டுத் தோட்ட தெங்கு உற்பத்தித் திட்டம் ஆரம்பம்

கொழும்பு,டிசெ.23

வீட்டுத்தோட்டத் தெங்கு உற்பத்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வளவ பிரதேசத்தில் பத்து இலட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை தெங்கு உற்பத்திச் சபை முன்னெடுத்துள்ளது.

குடும்பம் ஒன்றுக்கு ஐந்து தென்னங்கன்றுகள் வீதம் 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் தெங்கு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு இரசாயனப் பூச்சிக் கொல்லிகள் அல்லது இரசாயன உரத்தைப் பயன்படுத்தாது சேதனப் பசளையை மாத்திரம் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ)

# பதுளை மாவட்டத்தில் 66 வீதம் மண்சரிவு ஏற்படும் அபாயம்!

பதுளை, டிசெ.23

பதுளை மாவட்டத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில், 66.91 சதவீதம் மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேற் கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக, பதுளை மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி தெரிவித்தார்.

பதுளை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற, அனர்த்த முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியவை வருமாறு;

"பூமியின் மொத்தப் பரப்பளவில் 79.32 சதுர கிலோ மீற்றர், மிகுந்த அவதானத்துக்கு உட்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. இது 2.77 சத வீதமாகும். அத்துடன், 467.9 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு, நடுத்தர ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இது 47.76 சதவீதமாகும். மேலும், ஒரு லட்சத்து 369.19 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு, குறைந்தளவிலான ஆபத்தைக் கொண்ட பிரதேசமாகும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில், மண்சரிவு அபாயமற்ற பகுதியாக, பூமியின் மொத்தப் பரப்பளவில் 942.92 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு அடையாளங் காணப்பட்டுள்ளது. இது, 32.93 சதவீதமாகும். மண் சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ள பகுதிகளை, எல்லை நிர்ணயம் செய்வதற்கு, கட்டட ஆராய்ச்சி நிலையம், நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மக்கள் தொகை மற்றும் குடியிருப்புகள் தொடர்பிலான தகவல்கள், கிராம செயலாளருக்கு ஊடாக பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் தகவல்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளுக்குச் சென்று, மக்களிடம் தகவல்களைப் பெறமுயலும்போது, அங்குள்ள மக்கள் அச்சத்துடனேயே பதிலளிக்கின்றனர். இதன் காரணமாகவே, மேற்படி தகவல்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக, கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்."-என்றார். (எ)

## நாடாளுமன்ற, மாகாண உறுப்பினர்களிடம் ஆலோசனை ஏதும் கேட்கப்படுவதேயில்லை

### கவலையுடன் குறைப்படுகின்றார் கமலேஸ்வரன்



"உள்ளூராட்சி அமைச்சில் திட்டங்கள் எதுவும் சரிவர அமையவில்லை" என்று கவலை வெளியிட்டார் கமலேஸ்வரன்.

"ஒட்டுசுட்டானுக்கு அப்பால் நான் ஒருவனே மாகாணப் பிரதிநிதி", எனக்குப் பொருத்தமான உள்ளூராட்சி சபைகளை மேற்பார்வை செய்ய நியமனம் தரப்படவில்லை" - என்றார் அவர்.

"வடக்கின் வசந்தம் மூலம் பல சந்தைகள் கட்டப்பட்டன. முல்லைத்தீவில் பிரதேசசபை செயலாளர் அவற்றைப் பராமரிக்கவில்லை. உரிய முறையில் அவை ஒப்படைக்கப்பட்டனவா என்பதும் தெரியவில்லை."

"கடந்த 16 ஆம் திகதி ஓர் ஆலோசனைக் கூட்டம் முதல்வர் இல்லாத காரணத்தால் பிற்போடப்பட்டது."

"என்ன தேவை, எங்கு உள்ளது என்பதை மாகாண சபை உறுப்பினர்கள் நாடாளுமன்ற, உறுப்பினர்கள் ஆகியோரிடம் ஆலோசனைகேட்பதில்லை.

"குற்றத்தன்மை மிக்கவர்களிடமே ஆலோசனைகள் பெறப்படுகின்றன" என ஆதங்கம் தெரிவித்தார் அவர்.

"பொருளாதார மத்திய நிலையம் மாங்குளத்துக்கு வரும் எனக் கூறினார்கள். ஆனால் மத்திய நிலையம் வரவில்லை."

"மணல் விவகாரம், காணி விவகாரம் தொடர்பில் பல பிரச்சினைகள், குறைபாடுகள் உள்ளன."

"முல்லைத்தீவுக்கான தேவைகளை சரியாக அறிந்து தீர்வைக் காண வேண்டும்" என்றார் கமலேஸ்வரன்.

# ஓணானே வாழாத இடத்தில் பறவைகள் சரணாலயமா?

### இப்படிக் கேட்கின்றார் சிவயோகன்



சுற்றுலாத்துறை செயற்பாடுகள் சிறப்பாக நடைபெறவில்லை என்றார் சிவயோகன். எமது வரலாற்று புள்ளிவிவரத்தில் எமது புள்ளி விவர ஏட்டில் கூட -முழுமையான விவரங்கள் இல்லை..." சிவ யோகன் கூறிக்கொண்டிருக்க ஓர் உறுப்பினரின் தொலைபேசி உள்ளே அலறியது.

"கௌரவ உறுப்பினர்கள் கைத்தொலைபேசிகளை உள்ளே கொண்டு வரவேண் டாம் என்று கூறியுள்ளேன். தயவு செய்து ஒன்றில் உடை யுங்கள் அல்லது எறியுங்கள்" என்றார் அவைத்தலைவர்.

"வரலாற்று பூர்வமான தமிழ் அரசர்கள் வாழ்ந்த பூர்வீக இடங்கள் இனங் காணப்பட்டு சுற்றுலா மையங்களாக மாற்றப்பட வேண்டும்."

"குருந்துமலை எனும் பழைய இராசதானி அமைந்த - ஒரு சிறிய மலைப்பிரதேசம் சிங்களக் குடியேற்றத்தால் பறிபோகும் ஆபத்து உள்ளது. இந்தவிடயத்தில் இச்சபையின் அனைத்து அமைச்சர்களும் எவ்வித அக்கறையுமின்றி இருக்கின்றனர். எல்லைப்புற தமிழ் மக்களுக்கு சகல உட்கட்டுமானங்களையும், நிறுவி இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களை மீள்குடியேற்றுங்கள். எல்லைப்புற பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டும்."

"முரளிப்பழம் எனும் பழம் சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் பயிரிடப்பட்டு வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் வன்னியில் அம்மரங்களைத்தறித்து பழங்களை எடுக்கிறார்கள்."

விவசாய அமைச்சு இதில் கவனமெடுக்க வேண்டும்.

" மேலும் ஒரே பயனாளிகள் திரும்பத் திரும்ப நிதி உதவிகளைப் பெறுகிறார்கள். இதனால் பாதிப்புடன் உள்ளோருக்கு உதவி கிடைப்பதில்லை."

"இரண்டு கைகளையும் இழந்த பெண்போராளியைத் திருமணம் செய்து ஒரு குழந்தையுடன் உள்ள குடும்பத் தலைவன் வாழ்வாதாரத்தைப் பேண, கொழும்பிலுள்ள கடையில் வேலை செய்கிறார். ஆனால் தாய்க்கும் குழந்தைக்கும் உதவி இல்லை. அக்குடும்பத்துக்கு நிதி உதவி செய்தால் உள்ளூரில் அவரால் வாழ முடியும்".

"வவுனிக்குளத்தில் ஒரு சரணாலயம் உருவாக்கியுள்ளார்கள். அங்கு ஒரு பறவையும் இல்லை. ஏன் ஓணான் கூட அங்கு வருவதில்லை. அப்பிரதேசத்தில் கழிவுகள் கொட்டப்படுகின்றன."


"கட்டாக்காலி நாய்களைப் பிரதேச சபைகள் என்ன செய்யப்போகின்றன?. நாய்களுக்கு ஒரு பாதுகாப்பு இடம் உருவாக்கி அங்கே சேர்க்கலாம்" எனவும் ஆலோசனை வழங்கினார் சிவயோகன்.

## வடக்கு மாகாண சபையில்...

தொகுப்பு– ஏகன் அநேகன்

வடக்கு மாகாண சபையின் 71 ஆவது அமர்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அப்போது அங்கு சுவையான சொல்லாடல்களும் இடம் பெற்றன. அவற்றின் சுருக்கக் குறிப்புகள் இங்கே.....

## போராட்டத்துடன் சம்பந்தப்படாமை முதல்வர் விக்கியின் தகைமையா?



"முதலமைச்சரின் தகைமைகள் என்று அஸ்மின் 3 விடயங்களைக் கூறினார். அதில் போராட்டத்துடன் தொடர்பில்லாதவர் என்பதும் ஒன்று. அப்படிக் கூறியமையை வன்மையாகக் கண்டிக்கிறேன். அஸ்மின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தக் கூடாது." என்று இந்திரராசா கூறத் தொடங்கியதும் ஏறத்தாழ பத்து நிமிடங்கள் சபையில் தீவிர கருத்து மோதல்கள் இடம்பெற்றன.

"இந்திரராசா மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார். வன் முறையை ஏற்றுக்கொள்ளா தவர் முதலமைச்சர் என்றும் அவரது கரங்களில் இரத்தக்கறை இல்லை எனவும் தான் அஸ்மின் கூறினார்" என்று சயந்தன் உரத்துச் சத்தமிட்டார்.

"உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் CBG ஒதுக்கீட்டின் கீழ் 12 வீதிகளை சிபாரிசு செய்து வேலைகள் நடந்தன. வேலைகள் முடிந்துவிட்டனவா என்பது கூட எனக்குத் தெரியாது. மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மிடம் அலுவலர்கள் உரையாடுவதில்லை. மதிப்புக்கொடுப்பதில்லை; என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. கடந்த வருடங்களிலும் இக் குறைபாட்டை கூறினோம்". என்றும் ஆதங்கப்பட்டார் இந்திரராசா.

"நெடுந்தீவில் வடதாரகை சரிவரப் பயன்படவில்லை. இப்பொழுது நெடுந்தாரகை நெடுந்தீவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டையும் சரிவரப் பராமரித்து பயன்படுத்த வேண்டும்". எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஊழல்கள் குறித்து கொழும்பில் விசாரணை யாழ்.மாநகர சபையில் மட்டும் ஏன் இல்லை?

### முன்னாள் மாநகர சபை உறுப்பினர் விந்தன் விசனம்



"யாழ்.மாநகர சபை ஊழல்கள் மோசடிகள் பற்றி முந்தைய ஆளுநருக்கு முறையிட்டு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின் நல்லாட்சி அரசில் பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவு மூலம் பழைய ஊழல்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறும் போது இங்கு யாழ்.மாநகர சபையில் மட்டும் ஏன் பழைய ஊழல்கள் குறித்து விசாரணை செய்யப்படவில்லை என்று மக்கள் கேட்கின்றார்கள்.

விசாரணை நடைபெற்று நீதிமன்று சென்றால் சாட்சி சொல்ல நாம் தயார். இவ்விடங்களில் அவைத் தலைவர் எம்மை சரியாக வழி நடத்தினார். அவரிடமும் சான்றுகள் உண்டு. மாநகர சபையில் உறுப்பினராக முன்னர் இருந்த எமக்கு மக்கள் பெரிய அழுத்தம் தருகின்றனர்" - என்றார் விந்தன் கனகரட்ணம்.

"மக்கள் நெரிசலும் குடியிருப்புக்களும் யாழ்.மாநகர சபைப் பகுதியில் அதிகரித்துவிட்டன யாழ்.மாநகர சபையில் ஆளணி சேவைகளும் போதுமானதல்ல. சுகாதாரத் தொழிலாளர்களின் சேவை மேலும் மேலும் தேவை. போராட்டம் நடத்திய அனைவருக்கும் நியமனம் வழங்க வேண்டும்" எனவும் விந்தன் கூறினார்.

"முதல்வரின் அமைச்சின் கீழுள்ள துறைகளுக்கு நாம் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டோம். ஆனால் ஆலோசனைக் குழுக்களை முதல்வர் கூட்டவில்லை. அதனால் என்ன நடந்தது என்பது எமக்கு தெரியாது. எதிர்வரும் காலங்களில் ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

## அணிகளோ அநேகம்; ஆனால் சொல்வழி கேட்கிறார்கள் இல்லை!

வடக்கு மாகாண சபையில் உள்ள அணிகள் குறித்து அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் விசனம் தெரிவித்தார்.

"எதிர்க்கட்சி வரிசையில் நான்கு கட்சிகள் இருக்கின்றன. எங்களிடம் - தமிழ்க் கூட்டமைப்பில் ஆறு கட்சிகள். மேலும் கட்சிகள் இல்லாத உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். யாரும் சொல்வழி கேட்கின்றார்கள் இல்லை. மணி அடித்தாலும் நிறுத்துகின்றார்கள் இல்லை." - இப்படி விசனம் தெரிவித்தார் அவைத் தலைவர்.

# ஊழல், மோசடிகளைக் கட்டுப்படுத்த இயலாத உயரதிகாரிகளால் வெட்கம்

### சீற்றத்துடன் ஆதங்கப்படுகின்றார் சுகிர்தன்



"உள்ளூராட்சி ஒப்பந்தகோரலில் தகுதி அற்றோர் உள்ளனர். அவர்களை 'பிளக் லிஸ்ட்' இல் போட வேண்டும். 'நெல்சிப்' திட்டத்தில் குடத்தனையில்ஒருவீதிபோடப்பட்டது. ஆனால் வீதிக்குக் கீழாக நீர் இறங்கி வீதியை உடைத்துப் பாய்கிறது. தரமற்ற வேலையை ஒப்பந்தகாரர் செய்துள்ளார். ஒப்பந்தகாரரை சரியாக நெறிப்படுத்த நாம் தவறினால் மக்களே பாதிக்கப்படுவார்கள்". என்றார் சுகிர்தன்.


யாழ்.மாநகரசபையில் 28 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டமை வெட்கக்கேடானது. ஆகையால் கணக்காளர் முதலியோரை மீறி இரண்டு ரசீது புத்தகங்களைவைத்து ஒருபெண் மோசடி செய்துள்ளார். பரீட்சையில் சித்தியடைந்து பதவியில் உள்ள உயர் அதிகாரிகளை நினைக்க வெட்கமாக உள்ளது. வரி அறவிடும் உத்தியோகத்தர்கள் இரண்டு புத்தகங்களுடன் தான் திரிகிறார்கள். ஆணையாளருக்கு முறையிட்டுள்ளேன். மோசடியான உத்தியோகத்தர்கள் நல்லூர் திருவிழாவிலும் மோசடி நடத்தினர்."

"கட்டடங்களுக்கு அனுமதிக்கும் போது தீயணைப்பு நிபுணர் நேரடியாகப் பார்த்து அனுமதிக்க வேண்டும். கொழும்பில் இருந்து கொண்டு ஒப்பம் வழங்கி அனுமதிக்கிறார்கள்."

"கிராமங்களில் வீதி விளக்குகள் இல்லை. இவ்வருடம் எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் வீதி விளக்குகளை பொருத்த வேண்டும்". எனவும் கேட்டுக் கொண்டார் சுகிர்தன்.

"900 பேருக்கு தொழிற்பயிற்சி என்று முதல்வர் கூறினார். சிப்பி - சோகியில் பொருத்துவேலைப் பயிற்சி கொடுத்தனர். எப்படி வேலை வாய்ப்பு வரும்? தொழிற்சாலைகள், முதலீட்டாளர்கள் வரவேண்டும். தொழில் முதலீடுகளை எவ்வாறு வெளியேற்றலாம் என்று சிந்திக்காமல் அவற்றை வரவேற்கவேண்டும். ஏன் கரும்புத் தோட்டத் திட்டத்தை நிராகரித்தார்கள் என்பது புரியவில்லை" - என்றார் சுகிர்தன்.

## ஒரு கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் தூத்துக்குடியில் மீட்பு




தூத்துக்குடி, டிசெ.23

தூத்துக்குடித் துறைமுகத்தில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 1.63 கோடி ரூபா பெறுமதியான 12 லட்சம் சிகரெட்டுகளை. மத்திய வருவாய் புலனாய்வுத் துறை கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜெபெல் அலி துறைமுகத்திலிருந்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்த கண்டெய் னர்களில் இந்த சிகரெட்டுகள் இருந்தன.

ஏ - 4 அளவுள்ள வெள்ளைக் காகிதங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்று கூறி, கொண்டுவரப்பட்ட 20 அடி நீள கண்டெய்னரில் வெளிநாட்டுச் சிகரெட்டுகள் கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து இந்தச் சோதனையை மத்திய வருவாய் புலனாய்வுத்துறை மேற்கொண்டது.

சோதனையில், வெள்ளைத் தாள்களுக்குக் கீழே, 300 பெட்டிகளில் டேவிடாப் வகைச் சிகரெட்டுகளும் டன்ஹில் வகைச் சிகரெட்டுகளும் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. கேரளாவைச் சேர்ந்த கடத்தல் கும்பல் இதனை இறக்குமதி செய்திருந்தது.

இது தொடர்பாக தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. (எ)

# நாடாளுமன்றம், சட்டசபை தேர்தல்கள் ஒரே நேரத்தில்!

## தேர்தல் ஆணையகம் நடத்த நடவடிக்கை

டில்லி, டிசெ.23

இந்தியாவில் நாடாளுமன்றம் சட்ட சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த தேர்தல் ஆணையகம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு மத்திய அரசுஆயிரத்து 9 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போது நாடாளுமன்றத் தேர்தல் தனியாகவும் பல்வேறு மாநிலங்களில் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் தனித்தனியாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் தேர்தலை நடத்த பல மடங்கு பணம் செலவாகிறது.

மேலும் தேர்தல் ஏற்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவற்றிலும் தேர்தல் ஆணையகம் அதிக கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

காலநேரம் விரயம் மற்றும் அதிக செலவைக் கட்டுப்படுத்த நாடாளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்தல்களையும் ஒரேநேரத் தில் நடத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கும், தேர்தல் ஆணையகத்துக்கும் கோரிக்கைகள் வந்தன. இதுதொடர்பாக தேர்தல் ஆணையகமும், மத்திய அரசும் தீவிரமாக பரிசீலனை செய்து வந்தன.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தலுடன் மாநில சட்டசபைத் தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்தத் தயாராக இருப்பதாகத் தலைமை தேர்தல் ஆணையகம் மத்திய அரசுக்குத் தகவல். தெரிவித்துள்ளது. இதை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் ஒரே நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தலையும் சட்டசபைத் தேர்தலையும் நடத்துவது தொடர்பாக எந்தச் சட்டமும் இயற்றப்படமாட்டாது, தேவைக்கேற்ப அப்போது முடிவு எடுக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே ஒரே நேரத்தில் நாடு முழுவதும் தேர்தல் நடத்த வேண்டும் என்றால் 14 லட்சம் புதிய வாக்குப் பதிவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு மத்திய அரசுஆயிரத்து 9 கோடி ரூ. நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் தேவை யான வாக்குப்பதிவு இயந் திரங்கள் வாங்கப்படும். ஆண்டுக்கு 5 லட்சம்இயந்திரங்கள் வீதம் மொத்தம் 15 லட்சம் இயந்திரங்கள் வாங்க தேர்தல் ஆணையகம் முடிவு செய்துள்ளது. தேர்தல் ஆணையகத்தின் முடிவு ஏற்றுக் கொள் ளப்பட்டால் 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து அனைத்து மாநில சட்டசபைத் தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடைபெறும் வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.(எ)

## தமிழகத்துக்கு புதிய தலைமைச் செயலாளர்



சென்னை, டிசெ.23

தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகன ராவ் நீக்கப்பட்டு, மேலதிக தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகன ராவின் வீட்டில், நேற்று முன்தினம் புதன் கிழமை வருமான வரித் துறை சோதனை நடத்தியது. அவரது மகன் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் சோதனை நடத்தப்பட்டது. இந்தச் சோதனைகளில் 30 லட்சம் ரூபா பணமும் 5 கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டன என்று தகவல்கள் வெளியாகின.

இந்தநிலையில், ராம மோகன ராவை தலைமைச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கி, புதிய தலைமைச் செயலாளரை தமிழக அரசு நியமித்துள்ளது.

மேலதிக தலைமைச் செயலாளர் பதவியில், நில நிர்வாக ஆணையாளராக இருந்த கிரிஜா வைத்திய நாதன் புதிய தலைமைச் செயலாளராக அறிவிக்கப் பட்டிருக்கிறார்.

ராம மோகன ராவ் நிர்வகித்து வந்த கண்காணிப்பு ஆணையாளர், நிர்வாக சீர்திருத்த ஆணையாளர் ஆகிய பணிகளையும் கிரிஜா வைத்தியநாதனே கவனிப்பார் என்றும் தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. (எ)

## தொழிலதிபர் சேகர் ரெட்டி புலனாய்வுத்துறையால் கைது



சென்னை, டிசெ.23

தொழிலதிபரும், திருப்பதி தேவஸ்தானத்தின் முன்னாள் உறுப்பினருமான சேகர் ரெட்டியை, மத்தியப் புலனாய்வுத் துறையினர் (சி.பி.ஐ) நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி சேகர் ரெட்டி, அவரது சகோதரர் ஸ்ரீநிவாசல் மற்றும் அவர்களது நண்பர் பிரேம் ஆகியோரது வீடுகள், அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது.

இந்தச் சோதனைகள் சில நாள்கள் தொடர்ந்து நடைபெற்றன. சோதனையின் முடிவில் 136 கோடி ரூபா வரை பணம் கைப்பற்றப்பட்டது. அதில் 34 கோடி ரூபா புதிய 2 ஆயிரம் ரூபா தாள்களாகக் கிடைத்தன. மேலும், 177 கோடி ரூபா மதிப்பிலான தங்கக் கட்டிகளும் கிடைத்தன.

இந்தநிலையில், சேகர் ரெட்டியும் அவரது சகோதர் ஸ்ரீநிவாசலும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, எதிர்வரும் 3 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். (எ)

## உலகின் உயரமான நினைவிடம்



உலகிலேயே மிக உயரமான நினைவிடம் இந்தியாவில் அமையவுள்ளது.

மிகஉயரமானநினைவிடமாக அரபிக் கடலில் மன்னர் சத்ரபதி சிவாஜி நினைவகம் அமைக்கப் படும் என்று மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

ரூ.3ஆயிரத்து 600 கோடி செலவில் மும்பை கடற்கரைப் பகுதியையொட்டி, சிவாஜி நினைவிடம் உருவாக்கப்பட உள்ளது. பிரதமர் மோடி இந்த மிகப்பெரிய திட்டத்துக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி அடிக்கல் நடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## கறுப்புப்பண பதுக்கலுக்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை

### இந்திய மத்திய அமைச்சர் தெரிவிப்பு



டில்லி, டிசெ.23

கறுப்புப்பணப் பதுக்கலுக்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று இந்திய மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளில் வருமான வரி அலுவலர்கள் சோதனையில் ஈடுபடுகின்றனர். இதில் பாரபட்சம் காட்டப்படவில்லை.

அனைத்து ஏ.ரி.எம்களிலும் விரைவில் மக்களுக்குத் தேவையான பணம் கிடைக்கச் செய்யப்படும்.

புதிய இரண்டாயிரம் ரூபா தாள்கள் மக்களுக்குக் கிடைப்பதில் பிரச்சினை உள்ளது என்றால், அந்தப் பணம் வேறு வழியில் வேறு யாருக்கோ செல்வதாகத் தான் அர்த்தம்.

அதைக் கண்டு பிடிக்கவும், தடுக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.''-என்றார். (எ)


## இராமேஸ்வரம் மீனவர் பணிப்புறக்கணிப்பு

இராமேஸ்வரம், டிசெ.23

இலங்கைக் கடற்படையின் தமிழக மீனவர் மீதான தொடர் நடவடிக்கையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை கச்சதீவுக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அத்து மீறி சிறைப்பிடித்தனர். இதேபோல நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு இராமேஸ்வரம் மற்றும் கோட்டை பட்டினத்தைச் சேர்ந்த 17 மீனவர்களையும் அவர்களது மூன்று படகுகளையும் நெடுந்தீவு கடல்பகுதியில் சிறைப் பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தேறிவரும் கருணாநிதி ரி.வி.பார்க்கிறார்; மருத்துவமனை வெளியிட்ட புகைப்படம்



சென்னை, டிசெ.23

காவேரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ரி.வி. பார்ப்பது போன்று புகைப் படம் ஒன்றை அந்த மருத்துவமனை வெளியிட்டுள்ளது.

இதேவேளை கருணா நிதி விரைவாகக் குணமடைந்து வருகிறார். முழுமையாக உடல் நிலைதேறிய பின்னர் வீட்டுக்குச் செல்வார் என்று மருத்துவமனை அறிக்கை கூறியுள்ளது.

ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் 7 ஆவது நாளாகச் சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் சென்னைக்குச் சென்று கருணாநிதியின் உடல்நலம் குறித்து விசாரித்து வருகின்றனர். (எ)

## விழுந்து நொறுங்கிய விமானம் கொலம்பியாவில் ஐவர் உயிரிழப்பு

பொகோட்டா, டிசெ.23

கொலம்பியாவில் சரக்கு விமானம் ஒன்று நேற்று முன்தினம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 5 ஊழியர்கள் உயிரிழந்தனர்.

கொலம்பியாவின் பியூர்ட்டோ கரேனோவில் உள்ள ஜெர்மன் ஒலனோ விமான நிலையத்தில் இருந்து போயிங் 727 என்ற சரக்கு விமானம் தலைநகர் பொகோட் டாவுக்கு புறப்பட்டுச் சென்றது. விமானம் உயரப் பறந்த சிறிது நேரத்தில் கீழ்நோக்கி வரத் தொடங்கியது.

பின்னர் கண்ணிமைக்கும் நேரத்தில் விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது. தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில், விமானத்தில் பயணித்த 5 ஊழியர்கள் உயிரிழந்தனர். தொழில்நுட்ப வல்லுநர் பிராவா மட்டும் உயிர் பிழைத்தார். அவரை மீட் புக்குழுவினர் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். (எ)

## ஜேர்மன் தாக்குதல்தாரி குறித்து தகவல் அளித்தால் ரூ. 2 கோடி!

பெர்ளின், டிசெ.23

ஜேர்மனியின் பெர்ளின் நகரில் கிறிஸ்மஸ் சந்தைக்குள் லொறியைச் செலுத்தி 12 பேரைக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தொடர்பான தகவல் அளிப்பவருக்கு சுமார் இரண்டு கோடி ரூபா (இலங்கை நாணயத்தில்) பெறுமதியான பரிசு வழங்கப்படும் என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.


அந்தச் சந்தேகநபர் ஆவண மோசடி தொடர்பில் ஜேர்மனியில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டு பின்னர், விடுவிக்கப்பட்டவர் என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பெர்ளினில் உள்ள கெய்சர் வில்ஹெம் ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய கிறிஸ்மஸ் சந்தையிலேயே இந்த தாக்குதல் மேற் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

### ஜனாதிபதியை பதவி விலகக்கோரி

# கொங்கோவில் ஆர்ப்பாட்டம்; ராணுவம் சுட்டதில் 26 பேர் பலி



கின்ஷா, டிசெ.23

கொங்கோவில் ஜனாதிபதி ஜோசெப் கபிலா பதவி விலகவேண்டும் என்று கோரி கின்ஷாஷா உட்பட சில நகரங்களில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவர்கள்மீது அந்நாட்டு இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகின்றது. பெரியளவில் வன்முறை வெடிக்கலாம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பக ஆய்வாளர் இடா சாவ்யெர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

தனது பதவிக் காலம் நிறைவுற்ற போதும் தேர்தல் நடத்தாது அதில் நீடிப்பதாகக் கூறப்படும் ஜனாதிபதி கபிலாவுக்கு எதிராக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துமாறு எதிரணித் தலைவர் எட்டியென்னே சிஷெக்கெடி அழைப்பு விடுத்திருந்தார். இந்தநிலையில் பொது மக்கள் மீது அரசு வன்முறையைப் பிரயோகித்து அவர்களைச் சுட்டுக் கொன்றிருப்பதால் சுமார் 12 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட கின்ஷாஷாவில் போராட்டம் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

தலைநகர் கின்ஷாஷாவில் ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டதுடன் அதிகளவில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. முன்னதாகத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தும் மக்கள் ஆர்ப்பாட்டம் அடக்கப்பட்டது.

கிழக்கு நகரான கோமாவில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதும் தெரிய வருகின்றது. கொங்கோ அதிகாரிகளால் அங்கு பல சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 1996-2003 வரையிலான கொங்கோ குழப்பநிலையில் மில்லியன் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இது மேற்குலகை அதிருப்திப்படுத்தியிருந்தது.

இந்தநிலையில் அங்கு ஒருபோதும் சமாதான அடிப்படையில் ஆட்சி மாற்றம் நிகழ்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கொங்கோ ஜனாதிபதி கபிலாவை சட்டத்தை மதிக்குமாறு ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (எ)

### மரண தண்டனைகள் குறைவடைந்தன அமெரிக்காவில்

நியூயோர்க், டிசெ.23

அமெரிக்காவில் மரண தண்டனைகள் விதிக்கப்பட்ட எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்த ஆண்டில் குறைந்தளவான மரண தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.இந்த ஆண்டில் 30 மரண தண்டனைகளே விதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் 1977 ஆம் ஆண்டு 137 மரண தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. ஜோர்ஜியா, டெக்ஸாஸ், அல்பாமா, புளோரிடா மற்றும் மிசூரி ஆகிய மாநிலங்களில் 20 மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (எ)

## ஈராக்கில் குண்டுவெடிப்பு 7 பேர் உடல் சிதறிச் சாவு



பக்தாத், டிசெ.23

ஈராக்கில் எதிர்க்கட்சி அலுவலகம் அருகே இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 7 பேர் உடல் சிதறிப் பலியானார்கள்.

ஈராக்கில் தன்னாட்சி பெற்றுள்ள குர்திஸ்தான் பகுதியில் கோய்சின்ஜாக் நகரில் ஈரான் நாட்டின் எதிர்க்கட்சியான 'குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சி -ஈரான்' அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்தின் அருகே செவ்வாய்க்கிழமை இரவு இரட்டைக் குண்டுவெடிப்பு இடம் பெற்றது.

இந்தக் குண்டு வெடிப்புகளால் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

இந்த குண்டு வெடிப்புகளில் 'குர்திஸ்தான் ஜனநாயக கட்சி - ஈரான்' தொண்டர்கள் 5 பேர், பாதுகாப்புப் படை வீரர் ஒருவர், ஒரு குழந்தை என 7 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். பலர் படு காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைத்தனர். (எ)

## ரஷ்யத் தூதர் சுட்டுக் கொலை: இருநாடுகளும் விசாரணை



அங்கரா, டிசெ.23

துருக்கியில் ரஷ்யத் தூதர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, இரு நாட்டு அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

துருக்கி சென்றுள்ள 18 பேர் கொண்ட ரஷ்ய விசா ரணைக்குழு, சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று ஆய்வு செய்தது.

இந்தத் தாக்குதல் தனி நபரால் மட்டுமே திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று விசாரணை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தாக்குதலில் ஈடுபட்ட அய்தின்டாஸூக்கு நெருக்கமானவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

இதனிடையே சுட்டுக் கொல்லப்பட்ட ரஷ்யத் தூதர் ஆண்ட்ரே கார்லோவின் உடல் மொஸ்கோ கொண்டு செல்லப்பட்டது. ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜிலாவ்ரோவ் கார்லோவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். (எ)

# வெடிக்கத் தயாராகும் எரிமலை



ரோம், டிசெ.23

பல வருடங்களாக அமைதியாக இருந்த 'கேம்பி பிளக்கெரி' எரிமலை தற்போது வெடிக்கும் நிலையில் உள்ளதாக இத்தாலிய எரிமலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தாலியின் நப்லி நகரத்தை அண்மித்த பகுதியிலுள்ள கேம்பி பிளக்கெரி என்ற எரிமலையே தற்போது வெடிக்கக் கூடிய ஆபத்தான நிலையை அடைந்துள்ளது.

எரிமலை ஆய்வியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு எரிமலையின் மக்மா தீக்குழம்பு திரவ வெளியீட்டு நிலையைக் கண்டுப்பிடித்துள்ள சம்பவம் இதுவாகும்.

இந்த எரிமலை வெடிக்குமாயின் சுமார் 5 இலட்சம் பேர் பாதிப்படையும் நிலை உள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த எரிமலை நப்லி நகரத்தை அண்மித்த பகுதியில் உள்ளதோடு மறுமுனையில் விசுவியஸ் எரிமலையும் காணப்படுவதால் புவியியல் ரீதியில் பெரும் பேரழிவுக்குச் சாத்தியம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் கேம்பி பிளக்கெரி எரிமலை வெடித்த போது 100 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது மேலும் ஐரோப்பாவில் பல நூறு வருடங்களில் இடம்பெற்ற மிகப் பெரும் எரிமலை வெடிப்பு இது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் கேம்பி பிளக்கெரி எரிமலை 2005 ஆம் ஆண்டு வரை உறங்கும் நிலையில் காணப்பட்டுள்ளதோடு 2012 ஆம் ஆண்டு மீண்டும் உயிர் பெற்றுள்ளது. இந்தநிலையில் தற்போது பெரிய வெடிப்புக்குத் தயாராகி உள்ளதாக இத்தாலிய எரிமலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)



தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இலங்கை வங்கி யாழ்ப்பாண இரண்டாம் மேற்தரக் கிளையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையார் எம்.ஜே. பிரபாகரன் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் ஜி.சகாதேவன் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மேற்படி பரீட்சையில் சித்தியெத்திய 60 மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (இ)

## தென்மராட்சி மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் வலயக் கல்விப்ப ணிப்பாளர் சு. கிருஸ்ண குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் க.தர்ம லிங்கம், சிறப்பு விருந்தினராக வடமா காண ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, கௌரவ விருந்தினராக லயன்ஸ் கழ கத்தின் பிரதி மாவட்டச் செயலாளர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் கலந்து கொள் வர். (இ)

# யாழ். மாவட்டத்தில் நல்லிணக்க வாரம்

## ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெறுகின்றன

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ். மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கவாரத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக மாவட்டத்தின் அனைத்து மட்டங்களிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை இந்தத் தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் அனைத்தையும் யாழ். செயலகம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான நிகழ்வுகள் மற்றும் ஒழுங்கமைப்புத் தொடர்பாக யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர்களுக்கும் செயலகத்தால் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்த வாரத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கு ஆசி வேண்டி மூவின மக்களும் விசேட வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர். அத்துடன் மரம் நடுகைத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளித்தல், சிரமதானம் உட்படப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பிரதேச செயலக பிரிவு ரீதியாக இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-53)

### யாழ். தமிழ்ச் சங்கம், கரிகணன் அச்சகம் ஏற்பாட்டில்

# நாவலர் விழா நாளை நல்லூரில்

## 'நாவலர் தொலை நோக்கு' ஆய்வுரைத் தொகுப்பு நூலும் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், கரிகணன் அச்சகம் ஆகியவற்றின்ஏற்பாட்டில் நாவலர் விழா நாளை 24ஆம்திகதிசனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் காலை 9 மணிக்கு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபருமான ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இறை வணக்கத்தை கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி வாசஸ்பதி ரவீந்திரன் வழங்க்வுள்ளார்.

வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியருமாகிய வேல் நந்தகுமார் வழங்குவார். தொடக்கவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் வழங்குவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் தலைமையில் 'நாவலர் தொலைநோக்கு' என்னும் விடயப் பொருளிலான ஆய்வரங்கம் இடம்பெறும்.

இதில் 'நாவலரின் தொலை நோக்கில் சமயம்' என்னும் விடயப் பொருளில்யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசனும் 'நாவலரின்தொலைநோக்கில் கல்வி' என்னும் விடயப் பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜாவும், 'நாவலரின் தொலை நோக்கில்மொழி' என்னும் விடயப் பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும்-

'நாவலரின் தொலை நோக்கில் பண்பாடு' என்னும் விடயப் பொருளில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலைவிரிவுரையாளர் கலாநிதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரனும்'நாவலரின் தொலை நோக்கில் சமூகம்' என்னும் விடயப் பொருளில் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ச.ஸ்ரீகாந்தும் உரையாற்றுவர்.

சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வு நிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆற்றுவார்.

'நாவலர் தொலை நோக்கு' ஆய்வுரைத் தொகுப்பு நூல் வெளியீடும்இதில்இடம்பெறும்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வழங்குவார்.

முதற்பிரதியை வைத்தியகலாநிதி ப.நந்தகுமார் பெற்றுக் கொள்வார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளுக்கு நாவலர் திருவுருவச் சிலைகள் வழங்கப்படவுள்ளன.

இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் நாவலர் சிலைகளைப் பாடசாலைகளுக்குவழங்குவார். (ஐ)

# புதுவருடத்துக்கான அரிசியை கொள்வனவு செய்ய ஏற்பாடு

கொழும்பு,டிசெ.23

புதுவருடத்தை முன்னிட்டு அரிசிக்குத் தட்டுப்பாடு வராமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை,சில்லறை விற்பனைக்கு உரிய லங்கா ச.தொ.ச நிறுவனத்தின் நெல்லை தமது கண்காணிப்பில் எடுத்து விநியோகிக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்.

மேலும், பத்தாயிரம் தொன் வெள்ளை மற்றும் நாடு அரிசியை, நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் இருந்து பொறுப்பேற்று மக்களுக்கு வழங்குமாறும் அறிவுறுத்தி உள்ளார்.

இம்மாதம் 14ஆம் திகதி பிரதமரின் தலைமையில் நடைபெற்ற, பொருளியல் முகாமைத்துவக் குழுவினர் கூட்டத்தில் 250,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

பிரதமரின் உத்தரவை விரைந்து செயற்படுத்தவும், முடிவாகியது.



இந்து சமயத்துறை ஆலாசகர் சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வர குருக்களுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜாவுக்குமிடையில் முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

தமிழ் இனத்தின் கலை கலாசாரங்கள் சீரழிந்து போவதும் இதனைச் சீர் செய்யும் வகையில் அறநெறிப்பாடசாலைகள், இந்து மாமன்றம், சிவத்தொண்டர் அணி, குருபூசைகள் போன்றன முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-81)

# செட்டிகுளம் சந்தைக்கான கேள்வி பிரதேசத்துக்குள் கோர வேண்டும்



## ஊர் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் நெல்சிப் திட்டத்தில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதியை வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரலை மாவட்ட ரீதியில் கோராது செட்டிகுளம் பிரதேசத்துக்குள் கோர வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை வலுப்படுத்தி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட சந்தை கட்டடத் தொகுதி வளாகத்தில் ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், 'உள்ளூர் வியாபாரிகளின் வயிற்றில் அடிக்காதே', 'உள்ளூர்பொருளாதாரத்தை அதிகரி', 'செட்டிகுளம் பிரதேச அதிகாரிகளே செட்டிகுளம் மக்களின் பொருளாதாரத்தில் கவனம் செலுத்து' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வடமாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப. சத்தியசீலன் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

இது தொடர்பாக வடமாகாண முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்று உறுதிமொழி வழங்கியதை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. பிரதேச சபையின் செயலாளரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது. (ஐ-100)

## பந்தை சேதப்படுத்தியதாக குற்றச்சாட்டு: பிளஸ்சிஸின் முறையீடு நிராகரிப்பு



துபாய், டிசெ.23

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பந்தை சேதப்படுத்தியதாக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து தென்னாபிரிக்க அணித்தலைவர் பிளஸ்சிஸ் மேல் முறையீடு செய்த மனுவை ஐ.சி.சி. நிராகரித்துள்ளது.


ஆஸ்திரேலியா- தென்னாபிரிக்க அணிகள் மோதிய 2 ஆவது டெஸ்ட் போட்டி ஹோபார்டில் நடந்தபோது தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளஸ்சிஸ் பந்தை சேதப்படுத்தியதாக புகார் எழுந்தது.


இதுகுறித்து விசாரித்த ஐ.சி.சி. டு பிளஸ்சிஸுக்கு அபராதம் விதித்தது. ஆனால், தான் தவறு செய்யவில்லை என்று கூறி டு பிளஸ்சிஸ் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்தார்.

இந்த மேல் முறையீட்டு மனுவை விசாரித்த ஐ.சி.சி. அதனை நிராகரித்து உள்ளது.

## ஐ.சி.சி. கனவு அணிகள் :

# ஒருநாள் அணித் தலைவர் கோஹ்லி; டெஸ்ட் அணியில் அஸ்வின், ரங்கன!





துபாய், டிசெ.23

இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் அணிகளை ஐ.சி.சி. நேற்று வெளியிட்டுள்ளது.

அதில், ஒருநாள் போட்டிக்கான அணிக்கு இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணியில் இந்திய வீரர் அஸ்வின், இலங்கை வீரர் ரங்கன ஹேரத் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் உலக அளவில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தும் சிறந்த வீரர்களை தேர்வு செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின் ஐ.சி.சி. கனவு அணியை ஆண்டு இறுதியில் அறிவித்து வருகிறது.

அந்த வகையில் 2016 ஆம் ஆண்டின் ஐ.சி.சி. கனவு அணிகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் ஒருநாள் அணிக்கு விராட் கோஹ்லி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், ரவீந்திர ஜடேஜா, ரோகித் சர்மா ஆகியோரும் ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

டெஸ்ட் அணியில் இந்திய அணியிலிருந்து ரவிச்சந்திரன் அஸ்வினும், இலங்கை அணியிலிருந்து சுழல்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத்தும் இடம் பெற்றுள்ளனர்.

ஐ.சி.சி டெஸ்ட் அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் விவரம் வருமாறு:-

டேவிட் வோர்னர் (ஆஸ்திரேலியா), அலைஸ்டர் குக் (இங்கிலாந்து) அணித் தலைவர், கேன் வில்லியம்சன் (நியூசிலாந்து), ஜோ ரூட் (இங்கிலாந்து), ஆடம் வோக்ஸ் (ஆஸ்திரேலியா, பேர்ஸ்டோவ் (இங்கிலாந்து), பென் ஸ்டோக்ஸ்(இங்கிலாந்து), அஸ்வின்(இந்தியா), ரங்கன ஹேரத் ( இலங்கை), மிட்செல் ஸ்டார்க் (இங்கிலாந்து), டேல் ஸ்டைன்(தென்னாபிரிக்கா), 12 ஆவது வீரர் ஸ்டீவ் ஸ்மித் (ஆஸ்திரேலியா)

ஐ.சி.சி. ஒருநாள் அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் விவரம் வருமாறு:-

டேவிட் வோர்னர் (ஆஸ்திரேலியா), குவெண் டன் டி கொக்(தென்னாபிரிக்கா), ரோகித் சர்மா (இந்தியா), விராட் கோஹ்லி (இந்தியா) அணித் தலைவர், டி வில்லியர்ஸ்(தென்னா பிரிக்கா), ஜோஸ் பட்லர் (இங்கிலாந்து), மிட்செல் மார்ஷ் (ஆஸ்திரேலியா), ரவீந்திர ஜடேஜா (இந்தியா), மிட்செல் ஸ்டார்க் (ஆஸ்திரேலியா), ரபாடா (தென்னாபிரிக்கா), சுனில் நரைன் (மேற்கிந்தியத் தீவுகள்), 12வது வீரர்- இம்ரான் தாஹீர்(தென்னாபிரிக்கா).

## இந்திய அணி வீரர்களுக்கு ஊக்கத் தொகை இல்லை!

புதுடில்லி, டிசெ.23



லோதா பரிந்துரைகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் நெருக்கடியால் இந்திய அணி வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணிக்கு இந்திய கிரிக்கெட் சபை பாராட்டுகளை தெரிவித்து உள்ளது.

இதுபோன்ற பெரிய தொடரில் வெற்றியீட்டும் போது கிரிக்கெட் சபை இந்திய வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவது வழக்கம். ஆனால், இங்கிலாந்து தொடரில் சாதனை படைத்த இந்திய அணிக்கு ஊக்கத் தொகை அறிவிக்கப்படவில்லை.

லோதா குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத் தாததால் உயர் நீதிமன்றம், இந்திய கிரிக் கெட் சபைக்கு நிதி ஆதாரத்துக்குக் கடும் கட்டுப்பாடு விதித்து உள்ளது.

சர்வதேசப் போட்டியை நடத்த போதுமான நிதிக்கு கூட உயர் நீதிமன்றத்தை கிரிக்கெட் சபை நாடவேண்டி உள்ளது.

ஆனால், இந்திய கிரிக்கெட் சபையால் ஊக்கத் தொகையை அறிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# இந்தியாவின் வெற்றிக்கு கோஹ்லியின் எழுச்சியே காரணம்!

### இலங்கையின் முன்னாள் வீரர் ஜெயசூரிய கூறுகிறார்

பட்னா, டிசெ.23

விராட் கோஹ்லியின் எழுச்சிமிக்க தலைமைத் துவத்தின் காரணமாகவே இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இந்தியா அபார வெற்றிகண்டுள்ளது என இலங்கையின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரிய தெரிவித் துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றிய நிலையில், பட்னாவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அணி உச்சக் கட்ட 'போர்மில்' இருக்கிறது. அதனால்தான் இங்கிலாந்து போன்ற வலுவான அணியையும் மிக எளிதாக வீழ்த்தியிருக்கிறது. விராட் கோஹ்லி தலைசிறந்த அணித்தலைவராவார். அவர், பந்துவீச்சாளர்களை சிறப்பாக பயன்படுத்துவதோடு, தானும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

கருண் நாயர் மிகச் சிறப்பாக ஆடி முச்சதம் அடித்துள்ளார். அது எளிதல்ல. ஒருவர் முச்சதம் என்ற மைல்கல்லை எட்டுவதற்கு மிகப்பெரிய பொறுமை அவசியமாகும்.

அனில் கும்ப்ளே இப்போது பயிற்சியாளராக அடியெடுத்து வைத்திருக்கிறார். அவர் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர். அதேபோன்று பயிற்சியாளராகவும் அவர் சாதிப்பார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்திய அணியின் முன்னாள் தேர்வுக் குழு உறுப்பினரான சபா கரீம் தெரிவித்தவை வருமாறு:-



இளம் வீரரான கருண் நாயருக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது.

உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடியதன் அடிப்படையில் இந்திய அணிக்கு கருண் நாயர் தேர்வு செய்யப்பட்டார். இப்போது இங்கிலாந்துக்கு எதிராக முச்சதம் அடித்ததன் மூலம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அனைத்து விதமான போட்டிகளுக்கும் இந்திய அணியின் தலைவராக கோஹ்லி நியமிக்கப்படலாமா என்ற கேள்விக்குப் பதிலளித்த சபா கரீம் பதிலளித்தவை வருமாறு:-

அனைத்து விதமான போட்டிகளுக்கும் தலைவராக கோஹ்லி தகுதியானவர்.

ஆனால், அடுத்த ஆண்டு சம்பியன்ஸ் கிண்ண போட்டி வரை டோனி தலைவராக இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தலைவர் பதவியிலிருந்து டோனி விலகும்போது, ஒரு நாள் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளுக்கான இந்திய அணியின் தலைவராக கோஹ்லி நியமிக்கப்படுவார் என்று தெரிவித்துள்ளார்.

## கிவிடோவாவுக்கு சத்திர சிகிச்சை



பிராக், டிசெ.23

கத்திக்குத்தில் கையில் காயம் அடைந்த டென்னிஸ் வீராங்கனை கிவிடோவாவுக்கு வெற்றிகரமாக சத்திர சிகிச்சை நடந்து முடிந்துள்ளது.

அவர் இன்னும் 3 மாதங்களில் விளையாட தகுதி பெறுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


# ஆசியக் கிண்ண இறுதிப்போட்டி:

# இலங்கை–இந்திய அணிகள் பலப் பரீட்சை!

கொழும்பு டிசெ.23

இலங்கையில் நடைபெற்றுவரும் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் சந்திக்கவுள்ளன.





நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்று இலங்கை அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிப்பெற்றுள்ளது. பங்களாதேஷ் அணிக்கெதிரான இந்த போட்டியில் டக்வர்த் லூவிஸ் முறைப்படி 26 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.3 ஓவர்களில் 194 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பங்களாதேஷ் அணி சார்பில் ரயான் ரப்ஷான் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார், இலங்கை அணிசார்பில் ஜெயவிக்ரம 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 2 விக்கெட்டுகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது.

இந்நிலையில் மழை தொடர்ந்து பெய்ததால், டக்வர்த் லூவிஸ் முறைப்படி இலங்கை அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணி சார்பில் சத்துரங்க 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

அரையிறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி இறுதிப்போட்டியில் இந்திய அணியைச் சந்திக்கவுள்ளது.

இதேவேளை, கெத்தாராம ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதலாவது பகல் இரவு அரை இறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 77 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிகொண்டது.

இதன் மூலமே இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை இந்திய அணி பெற்றது.

19 வயதுக்கு உட்பட்ட வர்களுக்கான ஆசிய கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் இந்திய இளையோர் அணி இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளமை இது மூன்றாவது தடவையாகும்.

இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஹிமான்ஷு ராணா அபாரமாகத் துடுப்பெடுத்தாடி சதம் குவித்தார். இம்முறை போட்டிகளில் சதம் குவித்த முதலாவது வீரர் என்ற பெருமை ராணாவுக்குச் சொந்தமானது. 112 பந்துகளை எதிர்கொண்ட ராணா 2 சிக்சர்கள், 12 பவுண்டரிகளை விளாசினார்.

அவருக்குப் பக்கபலமாக ஷுப்மான் கில், அணித் தலைவர் அபிஷேக் ஷர்மா ஆகியோர் துடுப்பெடுத்தாடினர். இந்தியாவினால் நிர்ணயிக்கப்பட்ட 295 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 7 விக்கெட்களை இழந்து 217 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஒரு கட்டத்தில் 83 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து ஆப்கானிஸ்தான் பலத்த தடுமாற்றத்தை எதிர்கொண்டது. ஆனால், மத்திய வரிசையில் நிசார் வாஹ்தத், ஷம்சுர்ஹ்மான் ஆகிய இருவரும் திறமையை வெளிப்படுத்தி தமது அணியை ஓரளவு கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இந்நிலையில், இலங்கை- இந்திய அணிகள் இறுதிப் போட்டியில் சந்திக்கவுள்ளன.

## பிரெஞ்ச் ஓபன் இரட்டையர் பட்டத்தை வெல்ல விரும்புகிறார் சானியா மிர்சா!




மும்பை, டிசெ.23

அடுத்த ஆண்டில் பிரெஞ்ச் ஓபன் இரட்டையர் பட்டத்தை வெல்ல விரும்புகிறேன் என்று சானியா மிர்சா கூறியுள்ளார்.

இது தொடர்பில் இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்தவை வருமாறு:-

டென்னிஸ் இரட்டையர் தரவரிசையில் மீண்டும் முதல் இடத்தை பிடித்திருக்கிறேன். இந்த ஆண்டில் ஒரு கிராண்ட்ஸ்லாம் (ஆஸ்திரேலிய ஓபன்) உட்பட 8 இரட்டையர் பட்டங்களைக் கைப்பற்றினேன்.

அந்த வகையில் இந்த ஆண்டு எனக்கு நம்ப முடியாத, வியப்புக்குரிய வகையில் அமைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அதிலும் ஆண்டின் இறுதியில் தரவரிசையில் முதல் இடத்தைத் தக்க வைத்திருப்பதை நினைத்து பெருமிதம் கொள்கிறேன்.

அடுத்த ஆண்டில் மேலும் ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்ல விரும்புகிறேன். குறிப்பாக நான் இதுவரை வெல்லாத பிரெஞ்ச் ஓபன் (பெண்கள் இரட்டையர்) பட்டத்தை வசப்படுத்தி விட்டால், அது அற்புதமான தருணமாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தது ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று வருகிறேன். உண்மையில் அதைத் தான் எனது இலக்காகப் பின்பற்றுகிறேன்.

இப்போதைக்கு எனது ஜோடியை மாற்றும் எண்ணம் எதுவும் இல்லை.- என்றும் கூறியுள்ளார்.

## உலக கிண்ணத் தொடருக்கு தலைவராகிறார் கோஹ்லி?

டில்லி, டிசெ.23

கோஹ்லி தலைமையிலான இந்திய அணி சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், அணித் தலைவரான டோனிக்குக் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக முன்னாள் இந்திய அணியின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

கோஹ்லி தலைமையிலான இந்திய டெஸ்ட் அணி, இதுவரை ஐந்து டெஸ்ட் தொடர்களில் விளையாடி உள்ளது.

இதில் 18 டெஸ்ட்களில் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்துக் கங்குலி தெரிவித்தவை வருமாறு:-

கோஹ்லியின் வெற்றிகள் இந்திய அணியின் தேர்வாளர்களுக்கு மிகப்பெரிய நெருக்கடியை கொடுக்கும்.

மூன்று விதமான போட்டிகளிலும் கோஹ்லி தலைவர் ஆவதற்குச் சில காலம் பொறுத்திருக்க வேண்டும்.

ஆனால், அவர் ஒருநாள் போட்டிகளுக்கு விரைவில் தலைவராகிவிடுவார். அது எப்போது என்று தான் தெரியவில்லை.

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கு இந்திய அணிக்கு யார் தலைவர் என்பதை அணிக்குழுத் தலைவர்கள் நிச்சயம் முடிவெடுப்பார்கள்.

இதனால், எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர் டோனிக்கு மிக முக்கியமானது. அவருக்கு அழுத்தம் கொடுக்கும் தொடராக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்திய அணியின் மற்றொரு முன்னாள் வீரரான அசாருதீனும் டோனிக்கு இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர் மிக முக்கியமானது என்றும் டெஸ்ட் போட்டிகளில் விராட் கோஹ்லியின் வெற்றிகள் நிச்சயம் அவரை ஒரு நாள் அணிக்கான தலைவராக்குவதற்கு வலுவாக்குகிறது எனவும் கூறியுள்ளார்.

இருப்பினும், டோனியின் சாதனைகளையும் தேர்வுக் குழுவினர் கருத்தில் கொள்வார்கள் எனவும் கூறியுள்ளார்.



# மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதால் எந்தப் பிரச்சினையுமே இல்லை!

*அமைச்சர் வஜிர அபேவர்த்தன சொல்கிறார்*

கிளிநொச்சி டிசெ.23

மாவீரர்தினத்தைக்கொண்டாடுவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை. வீரர்களின் தினத்தைக் கொண்டாட முடியும். இறந்த பின்னர் எவருக்கும் மரியாதை செலுத்தவேண்டும். அது பிரச்சினைக்கு உரிய ஒன்றல்ல – என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலகக் கட்டடத் திறப்பு விழா நேற்று இடம் பெற்றபோது, அங்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேசசெயலாளர்தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர்மேலும்தெரிவித்தவை வருமாறு –

மாவீரர் தினத்தைக் கொண்டாடுவது தொடர்பில் சிலர் கவலையடைகின்றனர். ஆனால், 1971, 1977, 1988 ஆகிய ஆண்டுகளில் தெற்கில் இடம்பெற்ற வன்முறைகளில் இறந்தவர்களையும் நினைவுகூருகின்றனர். எமது மதத்தின் அடிப்படையில், இறந்த பின்னர் அனைவருக்கும் மரியாதை செலுத்த வேண்டும். இறந்த பின்னர் அவர் நல்லவரா, கெட்டவரா என்பதைப் பார்க்கக் கூடாது. எனவே, மாவீரர் நாள் கொண்டாடுவது பிரச்சினை அல்ல.

மாவீரர் நாள் கொண்டாடும் பிரச்சினையை பொலிஸ் மற்றும் முப்படையினர் மீது திணிப்பது நல்லதல்ல. இந்த விடயத்தில் நாங்கள் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும். – என்றார். (ம-70)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்கி வாசித்தார். ஆளும் தரப்பில் ஐங்கரநேசனை கடுமையாக விமர்சிக்கும் சிலர் நீண்ட நேரம் சபையில் இருக்கவில்லை.

சாதாரணகுற்றச்சாட்டுகளுடன் விடயம் ஒப்பேறியது.

விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சுஆகியவற்றுடன்தொடர்புடைய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் சிக்கல் ஏதுமின்றி ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

## மிக கண்ணிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளங்களிலும் வெளியான செய்தியைப் பார்வையிட்ட சாதாரண மக்களும், கல்விமான்களும், சமூக ஆர்வலர் களும் வேதனையும், விசனமும், அதிருப்தியும் வெளியிட்டனர். சமூக வலைத்தளங்கள் ஊடாக நூற்றுக்கணக்கானவர்கள் தமது விமர்சனங்களைப் பரிமாறத் தொடங்கியமையையும் அவதானிக்க முடிந்தது.

முதலமைச்சரை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்தும் உரையை ஆற்றிய அஸ்மின் மற்றும் சயந்தன் ஆகியோர் மீதும் கொச்சைத்தனமான வார்த் தைகளைப் பரிமாறி சண்டைக்குத் தயாரானவர்கள் குறித்தும் பல்வேறு தரப்பாரும் சமூக வலைத்தளங்கள் மூலம் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று வியாழக்கிழமை சபைக்குள் வந்த அனைத்து வட.மாகாண சபை உறுப்பினர்களும் ஒருவருக்கு ஒருவர் மரியாதை, மதிப்பு, நட்புடன் பழக முற்பட்ட மையை அவதானிக்க முடிந் தது.

அதேவேளை அவை நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமான போதே, நேற்று அவையில் நடந்த விடயங்கள் பற்றி ஊடகங்கள் கடுமையாக விமர்சிக்கின்றன. நீங்கள் அனைவரும் சபை ஒழுங்கு விதிகளை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.நாம் முன்மாதிரியாக, ஒழுங் கும் ஒழுக்கமும் மிக்கவர்களாக நடந்து காட்டுவது அவசியம்.– என்று கண்ணியம் மிக்க தொனியில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சக உறுப் பினர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

## ஐங்கரநேசனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறியவை வருமாறு: –

''அமைச்சரின் உரை அருமை. மாங்குளத்தில் விவசாயம், நீர்ப்பாசனம் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களை ஆரம்பிக்கவுள்ளார். கௌரவ முதல்வர் இதை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு வடமாகாணத்தின் சகல தலைமை அலுவலகங்களையும் மாங்குளத்துக்கு மாற்ற வேண்டும்.

''வடமாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் குளங்களும் விவசாயப் பாதைகளும் புனரமைக்கப்படாமல்உள்ளன. மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மூலமும் அவை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

''வன்னியில் 80 வீதமானோர் விவசாயிகள். இரண்டு போகப் பயிர்ச் செய்கைக்கும் பாரிய விவசாயத் திட்டம் 2017 இல் வகுக் கப்பட வேண்டும்.

'' 2015 இல் கூட்டுறவுத் திணைக்களம் மூலமான நெற் கொள்வனவு நிறுத்தப்பட்டது. இதனால்தனியார் ஆதிகத்தால் விவசாயிகள் பெரும் நட்டமடைந்தனர்.2017 இல்கூட்டுறவுத் துறைமூலம்நெற்கொள்வனவு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

''எல்லா அமைச்சுக்களுக்கும் கடந்த ஆண்டிலும் பார்க்க நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு நிதி தரவில்லைஎன்பதால்மக்களுக்குரிய சேவைகளை அமைச்சர்கள் நிறுத்த முடியாது. என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோதெரியாது. உரியநிதியை ஒழுங்குபடுத்துங்கள்."

"விவசாயஅமைச்சர்எனக்கு மாமனோ, மச்சானோ அல்ல. வவுனியாமாவட்டத்தில்விவசாய அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதே எனது ஆதங்கம்.

"ஊழல் மற்றும் மோசடிப் பிரேரணை விவசாய அமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது. ஆதாரங்களைச் சமர்ப்பித்தால்விவசாய அமைச்சரை விசாரிக்க முடியும் என முதல்வர் கூறினார். ஆனால் விசாரணைகளுக்கு முயற்சி ஏதும்எடுக்கப்படவில்லை.மூவர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப் படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறான விசாரணைக்குழுவிடம் ஆதாரங்கள் சமர்ப்பிக்கச் சென்ற போது அங்கு அக்குழு இயங்கவில்லை. பின்னர் ஒரு அதிகாரியிடம் சமர்ப்பிக்குமாறு பத்திரிகை மூலம் முதல்வர் அறிவித்தார். அவ்வதிகாரியிடம் சகல ஆவணங்களையும் சமர்ப்பித்துவிட் டேன். என்னுடையவேலைமுடிந்துவிட்டது. இனிவிவகாரம் அவர்கள் சம்பந்தப்பட்டது.

இப்பொழுது அவர் மூலம் வவுனியாவின் அபிவிருத்தியையே கவனிக்கப்போகிறேன்." – என்றார் லிங்கநாதன்.

# வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் நேற்று மாகாண சபைக்கு முன் போராட்டம்

*முதலமைச்சருக்கான மகஜர் கையளிப்பு*



வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தினர் நேற்று வடக்கு மாகாண சபைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

அதிபர் சேவை பிரமாண குறிப்பு வெளிவந்த திகதி அல்லது போட்டிப் பரீட்சை நடந்த திகதி அல்லது அதிபர் சேவை பரீட்சைக்கு விண்ணப்பம் கோரிய திகதி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றும் முன்னர் கடமையேற்ற அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் வலியுறுத்தினர்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது தமது பிரச்சனைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வு கோரியும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மகஜர் ஒன்றும் இவர்களால் வழங்கப்பட்டது.

# மோ.சைக்கிள் பிறேக் இயங்காமையால் காலால் பிறேக் பிடித்தவர் படுகாயம்

மோட்டார்சைக்கிளைச்செலுத்திச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் அதனை நிறுத்துவதற்கு தடுப்பை (பிறேக்) பயன்படுத்தி, அது இயங்காமையால் காலால் நிறுத்த முற்பட்டபோது மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு – வள்ளிபுனம் என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சே.ஜெறோம் (வயது-30) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார்.

சம்பவ தினத்தன்று இந்தக் குடும்பஸ்தர் புதுக்குடியிருப்பில் இருந்து வள்ளிபுனத்திற்கு தனது உறவினர் வீட்டுக்குச் சென்றார். வீட்டுக்குச் சமீபமாகச் சென்றதும் மோட்டார் சைக்கிளின் பிறேக்கைப் பிடித்தபோது அது இயங்கவில்லை.

இதனால் பதற்றமடைந்த அவர் துவிச்சக்கரவண்டியில் காலால்பிறேக்பிடிப்பதுபோன்று காலால் பிறேக் பிடித் தார். இதனால் மோட்டார் சைக் கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட நிலையில் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ம-09)

# புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்5புலமைப்பரிசில்பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற சகல மாணவர்களும் வலயக் கல்வி அலுவலகத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த 700 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

# முதல்வர் விக்கி ஜனவரி 6 இல் கனடாவுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.23

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி கனடா செல்லவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

கனடாவின் மார்க்கம் நகரத்தோடு முல்லைத்தீவு நகரை இணைத்து இரட்டை உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுவது இவரது பயணத்தின் முக்கிய நோக்கமாக அமையவுள்ளது.

இதைவிட, அவர் அங்கு மேலும் பலநிகழ்வுகளில் கலந்து கொள்வார் என்றும் தெரிய வருகின்றது. இதற்கான ஏற்பாடுகளை கனடாவில் உள்ள தமிழ் மக்கள் மேற்கொண்டு வருகிறார்கள் எனவும் கூறப்பட்டது. (ம)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே இலங்கை குறித்த அறிக்கையை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிடும் அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளிக்கவுள்ளது. இதன் போது அரசு தரப்பிலும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் மீண்டும் அரசமைப்புச் சபையாகக் கூடி புதிய உத்தேச அரசமைப்பு மற்றும் தீர்வுத்திட்டம் தொடர்பில் ஆராயவுள்ள நிலையில் கூட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடல் மிக முக்கியம் வாய்ந்ததாக இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

## நியூஸிலாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நியூஸிலாந்து அகதிகள் சபையில் நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றும் சட்டத்தரணி கைலேஷ் நியூஸிலாந்தில் அகதி அந்தஸ்து கோரும் இலங்கையருக்குச்சேவையாற்றி வருபவர் என அவரின் உறவினர்கள் கூறியுள்ளனர்.

சட்டத்தரணியின் சகோதரி மற்றும் பாட்டன் ஆகியோரும் இந்தத் தீ விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## சுன்னாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹோட்டல்கள் மற்றும் பல நிறுவனங்களை நடத்தும் கோடீஸ்வரர். அவர் இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தின் உறுப்பினர். 1999 முதல் பிரிட்டனின் சார்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் எம்.பியாக இருந்து வரும் மிகமுக்கிய புள்ளி அவர்.

ஐரோப்பிய ஒன்றிய எம்.பி. ஒருவர் தாமோ, தமது நிறுவனத்தின் மூலமோ எந்தத் தேசத்திலும் சுற்றுச்சூழல் மாசடைவதற்கு துணைபோகக் கூடாது என்பது விதிமுறை. அதைமீறி செயற்படுவது நிரூபிக்கப்பட்டால் அவரது பதவி பறிபோகும்.

இந்தப் பின்புலத்தில்தான் 'நொதேர்ண் பவர்' நிறுவனத்தினால் சுன்னாகம் பகுதியில் நிலத்தடி நீர் மாசடையச் செய்யப்பட்டதான குற்றச்சாட்டின் பேரில் அதன் மூலக்கம்பனியின் இயக்குநரான அந்தப் பிரபல புள்ளிக்கு எதிராக லண்டனின் வழக்குத் தாக்கல் செய்ய இலங்கைத் தமிழர்கள் சிலர் நடவடிக்கை எடுத்தனர்.

இதற்கான பெரும் செலவில் பிரபல ஆங்கிலேய சட்டத்தரணி ஒருவர் ஒழுங்குபடுத்தப்பட்டார்.

வழக்குத் தாக்கலின் முதல் நடவடிக்கையாக மேற்படி விடயங்கள் அடங்கிய குற்றச்சாட்டுப் பத்திரம் அந்தப் புள்ளிக்கு சட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டது.

அதையடுத்து அந்தப் புள்ளியின் சட்டத்தரணி நிறுவனம், வழக்குத் தொடுக்கும் சட்டத்தரணியுடன் தொடர்பு கொண்டார்.

'நொதேர்ண் பவர்' கம்பனி விவகாரம் தொடர்பாக மாகாண சபை ஒரு நிபுணர் குழு ஒன்றை நியமித்திருக்கின்றது என்றும் –

அதன் அறிக்கை ஒரு வாரத்தில் வெளிவரவுள்ளது என்றும் –

அந்தநிபுணர்குழுஅறிக்கை மேற்படி 'நொதேர்ண் பவர்' கம்பனிக்குச் சார்பாக வருகின்றது எனத் தாங்கள் அறிகின்றார்கள் என்றும் –

எனவே, வழக்குத் தாக்கல் செய்து அதைத் தொடர்வது பயனற்றது என்றும் –

மேற்படி பிரபல புள்ளியின் சட்டத்தரணிகள் கம்பனி அந்த வெள்ளைக்கார சட்டத்தரணிக்கும் தெரியப்படுத்தியது.

அதையடுத்து வழக்குப் போடும் முயற்சி கைவிடப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய மட்டத்தில்முக்கியத்துவம்மிக்கஒருபிரபல அரசியல்வாதியான பண முதலையைப் பாதுகாக்கும் விதத்தில் விடயங்கள் நடந்துள்ளன.

நிபுணர் குழுவின் அறிக்கை எப்படி அமையப் போகின்றது என்பது இங்குள்ளோருக்குத் தெரிய முன்னர் லண்டனில் அந்த முக்கிய புள்ளியின் சட்டத்தரணிநிறுவனத்துக்குத் தெரிந்து விட்டது.

இந்த் தகவல்கள் எல்லாம் முதலமைச்சருக்குச் சமர்ப்பணம். அவரே மேற்கொண்டு விசாரித்து, உண்மையில் என்ன நடந்து என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார் சி.தவராசா.

**ஆசிரியர் குறிப்பு**

மேற்படி புள்ளியின் பெயர், விவரங்களை சபையில் தவராசா தெரிவித்தார். எனினும் சட்டப் பிரச்சினைகள் கருதி அந்தப் பெயர் விவரம் தவிர்க்கப்பட்டுள்ளது. (ஆ–ர்)

## வினாத்தாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் அறிவித்துள்ளது.

வினாத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக நாட்டில் உள்ள 68 பாடசாலைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதால் இந்தப் பாடசாலைகள் ஜனவரி மாதம் 16ஆம் திகதியே முதலாம் தவணைக்காகத் திறக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# கச்சதீவு அந்தோனியார் தேவாலயம் இன்று ஆயரிடம் கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.23

இலங்கை அரசால் கச்சதீவில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந் தோனியார் தேவாலயம் இன்று யாழ். ஆயரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

எனினும் அடுத்து வரும் உற்சவத் தின் போதே அந்தோனியார் திருத் தலம் உத்தியோக பூர்வமாகத் திறக் கப்படும் என யாழ்.ஆயர் இல்ல வட் டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய நிகழ்வில் பங் கேற்பதற் காகத் தமிழகத்தைச் சேர்ந்த 100 பக்தர்கள் படகு மூலம் கச்சதீவுக்குச் செல் வதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தியக் கடற்படையினர் ரோந்துக் கப்பல்கள் சகிதம் பக்தர்கள் செல்லும் படகுகளைப் பாதுகாப்பாக அழைத் துச் சென்று இந்தியக் கடல் எல்லையில்



இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைப்பர் எனவும் கூறப்பட்டது.

இலங்கையிலிருந்து பக்தர்களைக் கச்சதீவுக்கு அழைத்துச் செல்வதற் கான ஒழுங்குகளை இலங்கைக் கடற் படையினர் மேற்கொண்டுள்ளனர் என வும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஷாரா
நியூ டிரெஸ் மார்ட். பி.லிட்

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு
இஷாரா வழங்கும் விசேட சலுகைகள்
ரூ.5000 /- இற்கு மேற்பட்ட தொகைக்கு
கொள்வனவு செய்யும் அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும்
விசேட பரிசுக்கூப்பன்களும்
பரிசுப் பொதிகளும்
வழங்கப்பட இருக்கின்றன.
இதைத்தவிர ரூ.5000/- இற்கு
மேற்பட்ட தொகைக்கு
கொள்வனவு செய்பவர்களுக்கு
அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு
வெற்றி பெறுபவருக்கு முதல் பரிசாக
மவுன்டன் துவிச்சக்கரவண்டியும்
மற்றும் ஐந்து பேருக்கு
ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

அதிர்ஷ்டம் பார்க்கப்படும்
திகதி : ௨௨.01.௨017
நேரம் : மாலை 6.00 மணி

தெரிவு செய்யப்பட்ட ஆடைகளுக்கு
விசேட விலைக்கழிவுகளுக்கு நாடுங்கள்.



இல.199A, 199B,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9925

அதிரடி சேல் விரையுங்கள்

+ அப்பியாசக் கொப்பிகள் 25% முதல் 30% வரை
+ பாட நூல்கள், உலக பிரசித்தி நாவல்கள், மருத்துவ நூல்கள், அகராதிகள் 10% முதல் 50% வரை
+ பிரமாண்டமான காட்சியறை உங்கள் எண்ணம் போல் தேர்வு செய்திட ஒருமுறை விஜயம் செய்யுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது சேவை வழமைபோல் இடம்பெறும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

NALIN Information Technologies Pvt Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

hp DELL நத்தார், புத்தாண்டை முன்னிட்டு
சிறப்புச் சலுகை விலைகளுடன் 31.12.2016 வரை

hp தரச்சான்று உத்தரவாதம் பெற்ற
ஒரேயொரு நிறுவனம்
Authorized Genuine Business Partner

Desktop Computer

HP 280G2
Processor - Dualcore 4400 (3.3 Ghz)
Mother.B. - intel H110
Ram - DDR4_4GB
Hard disk - 500GB
Optical Drive - HP DVD Writer
Monitor - 18.6" LED
FREE OS - DOS
HP Keyboard & Mouse
Rs. 58,500

HP 280G2
Processor - i3-6100 -6th Gen 3.7 Ghz)
Mother.B. - intel H110
Ram - DDR4_4GB
Hard disk - 500GB
Optical Drive - HP DVD Writer
Monitor - 18.6" LED
FREE OS - DOS
HP Keyboard & Mouse
Rs. 68,500

HP 400G3
Processor - i5-6500 (3.2Ghz) 6th Gen
Mother.B. - intel H110
Ram - DDR4_4GB
Hard disk - 500GB
Optical Drive - HP DVD Writer
Monitor - 18.6" LED
FREE OS - DOS
HP Keyboard & Mouse
Rs. 81,000

HP 400G3
Processor - i7-6700 (3.4Ghz) 6th Gen
Mother.B. - intel H110
Ram - DDR4_4GB
Hard disk - 500GB
Optical Drive - HP DVD Writer
Monitor - 18.6" LED
FREE OS - DOS
HP Keyboard & Mouse
Rs. 102,500

DELL

DELL VOSTRO 3650
Processor - i3 - 6100
Ram - 4GB
Hard disk - 500 GB
Display - 15.6" LED
OS - DOS
Rs. 69,500

DELL OptiPlex 3040 MT
Processor - i5 - 6500 (3.2 Ghz)
Ram - H110
Hard disk - 500 GB
Display - 18.6" LED
OS - DOS
Rs. 84,500

DELL OptiPlex 3040 MT
Processor - i3 - 6100
Ram - 4GB
Hard disk - 500 GB
Display - 18.6" LED
OS - DOS
Rs. 69,500

DELL VOS TRO 3568
Processor - i3 - 7100
Ram - 4GB
Hard disk - 500 GB
Display - 15.6" LED
OS - DOS
Rs. 67,900

HP - Lap Top 7th Gen (7ம் தலைமுறை மடிக்கணனிகள்)

HP 15-BA 010AU
Processor - AMD Dual Core E2-D110 (1.8Guz, 2Mb Cache)
Ram - 4GB DDR3L 1600 (1x4GB)
Hard disk - 500GB
Display - 15.6" LED
OS - DOS
Rs. 41,000

HP 15-AY 119TU
Processor - intel i3-7100U (2.4 Ghz) 7th Gen
Ram - 4GB DDR3L
Hard disk - 1TB
Display - 15.6" LED
OS - DOS
Rs. 63,500

HP 15-AY119 TX
Processor - intel i3-7100U (2.4 Ghz) 7th Gen
Ram - 4GB DDR3L
Hard disk - 1TB
VGA - AMD RADEOM R5 M430
Display - 15.6" LED
OS - DOS
Rs. 65,000

HP 15-AY120TX
Processor - intel i5-7200U (2.5 Ghz) 7th Gen
Ram - 4GB DDR4
Hard disk - 1TB
VGA - AMD RADEOM R5 M430
Display - 15.6" LED
OS - DOS
Rs. 81,000

HP 15-AY103 TX
Processor - intel i5-7200U (2.5 Ghz)
Ram - 4GB DDR3L
Hard disk - 1TB
VGA - AMD RADEOM R5 M430
Display - 15.6" LED
OS - Win 10 Home Ori
Rs. 85,900

HP 15-AU171 TX
Processor - intel i5-7200U (2.5 Ghz) 7th Gen
Ram - 8GB DDR4
Hard disk - 1TB
VGA - NVIDIA GEFORCE 940 MX
Display - 15.6" LED
OS - DOS
Rs. 93,000

HP Laserjet pro1102
From HP Business Partner only
Special Price: Rs. 15,500

The Winner of
Best Emerging Retail Partner
Awards 2016
Sri Lanka

* நிபந்தனைக்கு உட்பட்டது.

No. 195/2, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975

வடபிராந்தியத்தில் மிகச் சிறந்த விலைக் கழிவுடன்
1 முதல் 3 வருடங்கள் வரை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.